திராவிடநாடு

12—7—59 | வார வெளியீடு | விலை 16 காசு

52/1

நடுவிழாவும் படுவிழாவும்

[கோ. கந்தசாமி]

பள்ளந்தோண்டிச் செடியை நட்டு
பக்குவமாய் நீரை விட்டு
நல்ல பேச்சு மழைபொழிவார் மேடையில்—மந்திரி
நகர்ந்ததுடன் மேயும் ஆடு மாடுகள்

ஆண்டின் ஏழாம் மாதத்திலே
அதனின் முதல் வாரத்திலே
வேண்டும் இந்த விழா என்று சொன்னவர்—மழையை
வரவழைக்க முன்ஷி உண்டு பண்ணவர்

நடும் விழாவும் ஒரு புறத்தில்
படும் விழா மற்றொரு இடத்தில்
தொடுகுறி சாஸ்த்திரம் போல் இருக்குது—இது
தேவை தானு என்று நெஞ்சம் சிரிக்குது

நட்ட இடத்தில் நட்டுக் கொண்டே
நடை முறையாய் ஆக்கிக்கொண்டே
பட்டுப் போகும் மரத்தை நின்று பார்ப்பதா?—இதன்
பலனும் என்ன என்று அரசைக் கேட்பதா?

—சு. மி. ஞாயிறு மலர்.

★ முதியவர் முகாரி! ★

"சட்டநாதப்பட்டர்! சட்டநாதப் பட்டர்!!" "கோயிலுக்கு அவசரமாப் போயிண்டு இருக்கேன். ஏங்காணும் இப்படி என் பேரைச் சொல்லி, அலறுகிறீர்..."

"அவசியமாத்தான்! ஆமா, அவசரமாக் கோயிலுக்குப் போறேன்னீரே? எதுக்குப் போறீர்..."

"நன்னாக்கேட்டே! சட்டநாதப் பட்டர் எதுக்குக் கோயிலுக்குப் போவேன்? அர்ச்சனை செஞ்சு வைச்சி, பத்தாளுக்கெல்லாம் ஆண்டவன் தெரிசனம் காண்பிக்கத்தான் போறேன்..."

"அதாவது, உமது பொழப்பை நடத்தப் போறீர். இல்லையா?"

"அபச்சாரம்! அபச்சாரம்! அடியேனைப் பார்த்து இத்தனைநாள் வரை இப்படியொருத்தர் பேசினதில்லே. சூடமேத்தி, தோத்திரம் செஞ்சு, அதற்குப் பிரதிபலனு, அவாளவா கொடுக்கிற தட்சணையை வாங்கிறதாலே, என் சேவையைத் தொழிலுன்னு நினைச்சீர்? இது பகவத் சேவை ஐயா! தொழிலல்ல, சேவை!!"

"சேவாமூர்த்தியாரே! செல்வதாகச் சொன்னீரே, அந்தக் கோயில் எங்கேயிருக்குது, தெரியுமா?"

"அடமுட்டாள்! நேக்கா, கோயில் எங்கேயிருக்குன்னு தெரியாது. அதோ, பெரிசாத் தெரியுதே, அதுதான் கோயில்..."

"அப்படியா? அந்தக் கோயிலுக்குள்ளேதான் கடவுள் இருக்காரோ!!"

"சந்தேகமா அதிலும்? எம்பெருமான், பார்வதி சமேதரா, விநாயகர் சுப்பிரமணியரோடு வீற்றிருப்பது அங்கேதானே!!"

"சாத்திரங்கள் ஓதுகின்ற
சட்டநாதப் பட்டரே!
...கோயிலிலேதேடா,
குளங்களேது ஏதடா
கோயிலும் குளங்களும்
கும்பிடும் குலாமரே
கோயிலும் மனத்துள்ளே!
குளங்களும் மனத்துளே!!"

* * *

நெற்றிக்கு நீறுபூசி, வேதம் ஓதுவதற்காக விரைந்து சென்றுகொண்டிருந்த சட்டநாதப்பட்டர் என்பவருக்குச் சொல்லுவது போல, பதினெண் சித்தர்களில் ஒருவரான **சிவவாக்கியர்** புனைந்துள்ள கவிதைகள் பலருக்குத் தெரிந்திருக்கலாம்! அந்தக் கவிதைகளைப் படிக்கும்போதெல்லாம் சட்டநாதப்பட்டர் என்றொருவர் இருந்தாரா, அல்லது கவி தேர்ந்தெடுத்த பாத்திரத்தின் பெயரா என்கிற ஐயம், எனக்கெழுவதுண்டு. இந்தக் கிழமை உண்மையிலேயே சட்டநாதரான ஒருவருடைய உரையினைக் காணும் பேறு பெற்றேன். இந்தியத் துணைக் கண்டத்துக்கே மிகப் பெரிதெனக் கருதப்படும் சுப்ரீம் கோர்ட்டில், நீதிபதியாயிருந்தவர் என்றால், பெரிய சட்டநாதர் என்றுதானே பொருள்? அதிலும், வெறும் நீதிபதிகூட அல்ல, அங்குள்ள நீதிபதிகளுக்கெல்லாம் பெரிய நீதிபதியாக—பிரதம நீதிபதியாக இருந்தவர்! இந்த உபகண்டத்துக்கே, சட்ட மூலம் வழிகாட்டவேண்டிய, கண்கண்ட நீதி தேவனாக வீற்றிருந்தவரான **பதஞ்சலி சாஸ்திரியார்** அவர்கள்,

அண்ணல்

திருவாய் திறந்து பேசியிருக்கிறார்!! எங்கு தெரியுமா? வெளிநாடுகளாயிருந்தால் இப்படிப்பட்ட விற்பன்னர்கள் சட்டக் கல்லூரிகளிலும் சான்றோர் மத்தியிலும் தாங்கள் கண்ட அனுபவங்களையும், பதவிக் காலத்தில் பெற்ற உண்மைகளையும் எடுத்துச் சொல்லி அறிவொளி பெருகும் பணியினைச் செய்வார்கள். இங்குதான் 'பென்ஷன்' பெற்ற பெரிய மனிதர்கள், உத்யோகத்தை விட்டதும் பஜனை மடத்துக்கல்லவா போகிறார்கள்? பதஞ்சலியார் மட்டும் விதிவிலக்கா! வேறெந்த மதத்திலும், அந்த மதத் துறையின் தலைவர்கள் பேசுவதும், அதைப் போய்க் கேட்டுவிட்டு வருவதும் வாடிக்கை. ஆனால் இங்கு அப்படியா!! கந்தா கடம்பா என்று கத்தத் தெரிந்தவனிலிருந்து, இதைத் [illegible] டக்குக் கருத்து விதைகளை மனதில் புதைத்திட முயலும் [illegible]மலைதவரையில், எவராயினும், எளிதில் புகக் கூடிய இடம் பஜனை மடம் ஒன்றுதானே!! காவி கட்டியவன், இங்கே சாமி. கடவுள் பெயரைச் சொல்லிப் பேசக் கிளம்புகிறவன் பிரசங்க பூஷணம். ஆடிப்பாடி இராகம் போட்டுக் கொஞ்சம் பாடத் தெரிந்தால், காலக்ஷேப பாகவதர். சாதாரணதுகள்கூட "சாமியாராகி" தண்டு கமண்டலத்தோடு தயாபரன் புகழைப் பேசும் போது, சட்டம் கற்று, சட்டத்துக்கே ஆண்டவராகயிருந்த பதஞ்சலியார், இத்திருப்பணிக்கு வருகிறார் என்றால், ஓய்ந்து வரும் மடங்களும் உற்சாகமிழந்து வரும் கூட்டமும் சும்மாயிருக்குமா!!

* * *

சென்னை தியாகர் நகரில் அமைந்துள்ள மடாலயச் சங்கமொன்றில் இந்தக்கிழமை பதஞ்சலியார், 'பக்தர்களுக்'கேற்பட்டுவரும் பரிதாபங்களைப்பற்றிப் பேருரையாற்றிருக்கிறார்! பக்தர்களுக்கு ஏற்படும் பரிதாபங்களுக்குப் பரிகாரம் தேடப் பகவானில்லையா, பதஞ்சலியார் துணையெதுக்கு என்று கேட்கத் தோன்றும்! அதென்னவோ, பக்தாமிர்தம் புகட்டவேண்டிய மடாதிபதிகளுக்கும் மார்க்கபந்துகளுக்கும் வரவரப் பகவான் மீதே நம்பிக்கை குறைகிறது போலும்!! பதஞ்சலி போன்றோர் மூலம், தங்களது குறைகளைத் தெரிவிக்கக் கூட்டம்போட்டு; எம். எல். சி.க்களான கிருஷ்ணமூர்த்தி புருஷோத்தமர் ஆகியோரையும் அழைத்துப் பேசவைத்திருக்கிறார்கள். ஆண்டவன் செயல் — அவன் விட்ட வழிப்படி எதுவும் நடக்கும்—அவனன்றி ஓரணுவும் அசையாது — என்று இந்த பக்தசீலர்கள் செப்புவதெல்லாம், பாமரருக்குத்தான்போலும்! தங்களுடைய நலனைப் பாதிக்கும் பிரச்னைகளென்றால், பதஞ்சலிகளை நாடுகிறார்கள் — பதஞ்சலிகளும்போய் பங்கு கொள்கிறார்கள்!

மடாலயங்கள், கோயில்கள் போன்றவைகள் தன்னிச்சையாக வாழவேண்டுமாம். அவைகளின் போக்கையும், சொத்தையும் கட்டுப்படுத்தும் வகையில் இப்போது சர்க்கார் வைத்துள்ள அறநிலைய போர்ட் போன்றவைகள் இருப்பதும், அதனுடைய அதிகாரப்பிடிப்பு அதிகமாவதும் கூடாதாம்.

இந்திய அரசியல் சட்டம் என்ன சொல்கிறது, மதத்துறைச் சொத்துக்களைச் சர்க்கார் பரிபாலிக்கலாமா, அந்தச் சொத்துக்களைப்

(4-ம் பக்கம் பார்க்க)

அரிசியில் அரசியல்!!

17 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (12—7—59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 52

இல்லாமை காரணமாக, ஏழுபேர் கொண்ட ஒரு குடும்பமே தற்கொலை செய்துகொண்டிருக்கின்றனர் அண்மையில் திண்டுக்கல்லில். நாட்டில் எங்கும் வறுமை. "வாழ வழியில்லை. ஆகவே தற்கொலையைத் தவிர வேறுவழியில்லை" எனக்கூறிச் சாவைத்துணைக் கழைத்துக்கொள்ளும் நிலை அதிகரித்து வருகிறது. "எப்படிப் பிழைப்போம்" என ஏங்கிடும் பரிதாப நிலை அன்றாடம். முப்பதுநாளும் உழைத்தும்,வாழ்க்கையை ஓட்டமுடியவில்லையே என்ற பரிதாபக் குரல் எங்கும்.

நாட்டின் உயிர்ப்பிரச்சினையாகிய உணவு நிலை பயங்கர நிலையில் உயர்ந்துகொண்டே போகிறது. ஒரு படி அரிசியின் விலை ரூ. 1—5—0 நடுத்தர மக்கள், குமாஸ்தாக்கள், தொழிலாளிகள் ஆகியவர்கள், வாங்கும் சக்திக்கு மிகமிக அதிகமாகிவிட்டது. தேவைக்கான அரிசியும் வாங்குமளவிற்கான விலையும் இல்லை. இதனால் எல்லோரது மனதிலும் ஏக்கம், கலக்கம்.

"பாலோடும், தேன்பாயும்" எனப் பாகுமொழி பேசி, ஆட்சிப்பீடமேறிய காங்கிரஸ்காரர்களால், ஆண்டு பன்னிரண்டுக்குப் பின்னும், நாட்டின் முக்கிய தேவையான, உணவுப்பிரச்சினையில் நல்லதொரு மனநிறைவு அளிக்கக்கூடியவகையில் முன்னேற்றம் காண முடியவில்லை. உணவுத்துறையில் அரசு காட்டி வரும் செயல்முறைகளும், வழிகளும் ஒவ்வொரு ஆண்டும் குழப்பம் நிறைந்ததாகவும், திர்க்கமற்ற முடிபுகளாகவும் "ஏனோதானோ"ப் போக்காகவுமே இருந்து வருகிறது.

"உணவு உற்பத்தியைப் பெருக்கிடவே ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றவிருக்கிறோம். முதல் ஐந்தாண்டுத்திட்ட இறுதியிலேயே, உணவு உற்பத்தி தன்னிறைவு கொண்டுவிடும். ஆகவே, ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாக்குங்கள். அரசு போடும் வரியைக்கொடுங்கள். திட்டத்திற்கு ஒத்துழையுங்கள்" என்பதாக டில்லிப்பேரரசு மக்களைக் கேட்டுக் கொண்டது.

மக்களும் நம்பினர். அரசுகேட்ட வரியைக்கொடுத்தனர். திட்டத்திற்கு ஒத்துழைத்தனர். கண்டபலன்! மேலும் உணவுப்பஞ்சம். அகவிலை ஏற்றம். பற்றுக் குறை.

மக்கள் கலங்கினர். மாட்சிமைதாங்கிய காங்கிரஸ் ஆட்சியாளர்களோ "மலைக்காதீர்கள். மாபெரும் திட்டங்கள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே போட்டிருக்கிறோம். ஏராளமான அணைக்கட்டுகள். நீர்த்தேக்கங்கள். வயல் முழுதும் நெல்விளையும். வரப்பெல்லாம் கதிர்காணும். ஆகவே இந்தத் திட்டத்திற்கும் உதவுங்கள். வரிகொடுங்கள். பற்றுக்குறை என்பதே இல்லை என்றாக்கி, மிகமலிந்தவிலையில் அரிசி கிடைக்க வழிசெய்வோம்" என்றனர்.

இம்முறையும் திட்டம் பூர்த்தியாயிற்று. மக்கள் எண்ணியபடி விலைவாசிகள் குறைந்துவிட்டனவா?

இரண்டாவது திட்டத்தின் மூன்றாண்டுகளிலும் உணவுப்பொருள்களின் விலை எந்த அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை ஆனந்த விகடன் இதழ் 3-5-59ல் கீழ்கண்டவாறு அறிவிக்கிறது.

		1956	1957	1958	1959
அரிசி மூட்டை	ரூ.	36	45	47	52
பருப்பு	,,	32	37	44	61
சர்க்கரை	,,	90	95	105	115
மிளகாய்	,,	60	70	72	77
புளி	,,	112	125	130	214

ஏன் இந்த விலை ஏற்றம். ஒவ்வொரு ஆண்டும் பயங்கர நிலையில் விலை உயர்ந்துவந்துள்ளது. மக்களின் வாங்கும் சக்திக்கு மிகமிக அதிகமாக உள்ளது. மக்களின் முக்கிய தேவையான அரிசியின் விலையோ பயங்கர வடிவத்திலே விலை ஏறிவிட்டது.

மக்கள் மிகமிகப் படுமோசமான நிலையை நோக்கி, மிகமிக வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கின்றனர். எங்கும் தேவை என்ற வேண்டுகோள். எல்லோரது வாழ்விலும் பற்றுக்குறை நிலைமை. நடுத்தர மக்கள் மிகமிக நலிவுற்ற வாழ்க்கையை மேற்கொண்டு, நைந்த உள்ளத்துடன் உள்ளனர்.

இத்தகைய அவலநிலையில் நாடும், நாட்டுமக்களும் உள்ளபோது, புதுடில்லியில் நிருபர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் "1958, 59-ம் ஆண்டில் இந்தியா, உணவு உற்பத்தியில் ஒரு மகத்தான சாதனையைச் செய்துள்ளது. இவ்வாண்டின் உற்பத்தி 7,30,00,000-டன். ஆனால் சென்ற ஆண்டிலோ 6,20,00,000-டன்தான். இதனை ஒப்பிடும்போது இவ்வாண்டின் உற்பத்தி ஒரு மகத்தான சாதனையே" எனக்கூறியிருக்கிறார் ஜுன் 20-ல்.

மாபெரும் பொதுக்கூட்டமாக இருந்திருப்பின் பெருத்த கையொலியும், மகிழ்ச்சி ஆரவாரமும், அவருக்குப் பரிசாகக் கிடைத்திருக்கும்.

ஆனால் பேசியதோ நிருபர்கள் கூட்டம். நேரு அவர்கள் கூறிய இப்புள்ளிவிவரம் நிருபர் ஒருவருக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்திருக்கிறது. ஆகவே, ஓர் நிருபர், நேருவைத் திரும்பக் கேட்டார், "இதை நீங்கள் நம்புகிறீர்களா?" என்பதாக.

உலக அரசியல் வானிலேசுடர்விட்டுப் பிரகாசிக்கும் அரசியல் வித்தகரான நேரு, நிருபரின் கேள்விக்கு "நிச்சயமாக நம்புகிறேன் இதில் வீண்சந்தேகம் ஏன்?"

எனப் பதிவிறுத்திருந்திருப்பாரேயானால், புள்ளிவிவரம்பற்றி விவாதத்திற்கே இடமில்லாது போயிருக்கும்.

ஆனால் நேரு சொன்னது இதுதான். "என் பொறுப்பின் கீழ் உள்ள மந்திரிகள் காட்டும் புள்ளிவிவரங்களை நான் நம்பாமல் வேறு என்ன செய்வது," என மழுப்பியிருக்கிறார்.

அரிசி விலையோ விஷம்போல் ஏறியிருக்கிறது இந்த ஆண்டில்! முன்னைய ஆண்டினைக் காட்டிலும். ஆனால் நேரு கூறுகிறார்—இவ்வாண்டு உணவு உற்பத்தி ஒரு மகத்தான சாதனையைச் செய்துவிட்டதாக.

நேரு அவர்கள் ஜூன் 20-ல் உணவு உற்பத்தி இவ்வாண்டில் மிகமிக அதிகம்என அறிக்கையிட்ட அதே தினத்தன்று, மதுரையிலே முகாமிட்டிருந்த சென்னை உணவு அமைச்சர் திரு. பக்தவத்சலம், நிருபர்களுக்களித்த பேட்டியில், **"சென்னை இராஜ்யத்தில் உணவு விலையேற்றம் மிகமிக அதிகரித்திருப்பது மிகுந்த கவலை அளிப்பதாக இருக்கிறது. இதனைப் போக்கவே இவ்வாண்டு சுமார் 2,000-நியாயவிலைக் கடைகள் திறக்க இருக்கிறோம்"** எனச் சொல்லியிருக்கிறார்.

டில்லிப் பெரியவர் ஏராளமான உணவு உற்பத்தியாகியுள்ளது எனக் கூறுகிறார். சென்னை அமைச்சரோ பற்றாக்குறை அதிகம்; அதை நீக்க நியாய விலைக் கடைகள் திறக்கப்படும் என்கின்றார்.

"பொதுவாக நாட்டில் விலைவாசிகள் மிகவும் உயர்ந்துவிட்டது. மக்களின் அத்தியாவசியப் பொருளான அரிசியின் விலையோ மக்களின் சக்திக்கு எட்டாத அளவிற்குமேல் போய்விட்டது. உணவுப் பொருள்களின் விலையுயர்வால் மக்கள் மிகவும் துன்பமடைகிறார்கள். எங்கு பார்த்தாலும் இதே பேச்சாகத் தானிருக்கிறது."

நாட்டின் உண்மை நிலை என்ன என்பதை காங்கிரஸ்வாதியும், காந்திய சீடருமான மதுரை என். எம். ஆர். சுப்பராமன் 3—6—59-ன் தினமணி ஏட்டின் கட்டுரை ஒன்றில் இப்படிக் குறிப்பிடுகிறார்.

"நாட்டின் உண்மை நிலை இதுதான். எங்கும் பற்றாக்குறை, அதன் விளைவால் விலையேற்றம். ஆனால் அல்லற்படும் மக்களைக் கேலிசெய்யும் வண்ணம், டில்லி அரசினர் புள்ளிவிவரங்களைக் காட்டுகின்றனர்."

புள்ளிவிவரங்கள் எந்த அளவில் செயல்படுவதாக உள்ளது என்பதுபற்றி அரசாங்கச் சார்பான தினமணி ஏடு 3—9—57-ல் 'வெற்றிக்கு வழி எது' என்ற தலைப்பில் 'சர்க்காரால் சேகரிக்கும் புள்ளிவிவரங்களும் அவற்றை ஒழுங்கு செய்து மதிப்பிடும் விதமும் திருப்திகரமாக இல்லை. அதன் காரணமாக ஆராய்ச்சியில்லாத முடிவுகளும், அந்த அடிப்படையில் "சீர்திருத்தங்களைச்" செய்யப்பார்க்கும் மனப்பான்மையும் மலிந்துவிட்டன. இவை இந்த நாட்டைப் பஞ்சத்தில் ஆழ்த்திவிடக்கூடும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு கண்டு, மேலேயும் சென்றுவிட்டதாகத் தம்பட்டம் அடித்தார்கள். சென்ற பதினெட்டு மாதங்களாக பற்றாக்குறைப் பேச்சு அதிகமாகி, ஏழைகள் வாங்கி உபயோகிக்கக்கூடாத அளவுக்கு விலைவாசிகள் உயர்ந்துவிட்டன" என அரசினரின் புள்ளிவிவரப் போர்வையின் பின் நிகழும் காட்சியினை எடுத்துக் காட்டுகிறது.

முச்சந்தியிலே உட்கார்ந்துகொண்டு மந்திரத்தாலே மாங்காய் வரவழைப்பதாகச் சொல்லி, கூடியிருக்கும் மக்களைச் சிறிது நேரத்திற்கு களிப்பிலே ஆழ்த்த முயலும் ஜாலக்காரன் தன்மையிலே ஒரு நாட்டின் பேரரசு, உணவுத்துறையிலே நடந்துகொள்ளுகிறது.

மக்களின் மனக்கொதிப்பினை மதிக்காது அன்னாரது உள்ளக்குமுறலை அலட்சியம் செய்யும் தோரணையில் "நீங்களென்ன அரிசிவிலை ஏறிவிட்டது என அங்கலாய்க்கிறீர்கள். பார்த்தீர்களா, புள்ளிவிவரத்தை, பன்மடங்கு அதிகம்உற்பத்தி, இவ்வாண்டில்" எனச் சொல்வது "ரொட்டியா கிடைக்கவில்லை, பிஸ்கோத்துச் சாப்பிடுவதுதானே" எனச் சொன்ன மக்களின் சக்தியறியாத மன்னனின் செயலை ஒத்ததாக இருக்கிறது என எச்சரிக்க விரும்புகிறோம். ❋

2-ம் பக்கத் தொடர்ச்சி

பயன்படுத்தலாமா என்பது குறித்துச் சட்டங்கள் செய்யலாமா, என்பன பற்றியெல்லாம் அலசி ஆராய்ந்து,கூடாது,தகாது,இதெல்லாம்நமது இந்துமதத்துக்கே கேடு தரும் காரியங்கள் என்பதாகப் பதஞ்சலியார் பேசியிருக்கிறார்.

அங்கங்கே இருப்பவைகளை ஆங்காங்கேயுள்ள பக்தர்களின் குழுவொன்றே பரிபாலனம் செய்து கொண்டால் போதும், இதற்குள் ஏன் சர்க்கார் தலையீடு, இது போலப் பிற மதங்களுக்கு மட்டும் உண்டா, என்று வினவுகிறார்.

சுப்ரீம் கோர்ட் பிரதம நீதிபதியல்லவா! சட்டத்துக்கும் சர்வேசுவரன் சொத்துக்களுக்கும் உள்ள தொடர்பை அலசியிருக்கிறார்!!

நமக்குவரும் ஆச்சரியமே, பக்தர்களுக்கேன் இப்படிச் சொத்துக்களைப் பாதுகாக்கும் ஆசை இவ்வளவு தூரத்துக்கு வருகிறது என்பதுதான். எந்தச் சொத்து எப்படிப்போனாலென்ன! அவன் கொடுத்தது, அவனிருக்கும் பூமியில் ஏதோ ஒருவிதமாகத்தானே போகிறது! அவன்தான் தூணிலுமிருக்கிறான் — துரும்பிலுமிருக்கிறானே!—என்றல்லவா, ஓட்டையும் பொன்னையும் ஒன்றாக நினைக்க வேண்டிய உத்தமர்கள் எண்ண வேண்டும்? அந்த எண்ணமிருக்குமேயானால் பண்டாரச் சந்நிதிகளுக்கேன் தங்கத்தாலே பாதக்குறடு? —சங்கராச்சாரியார்களுக்கேன் வெள்ளியிலே பல்லக்கு; என்றன்றோ, பதஞ்சலிபோன்ற கற்றுத்தெளிந்தோர் கேட்டிருக்கவேண்டும்! அப்படிக் கேட்பார்களானால், மடாலயங்களேன் சந்து பொந்துகளைத் தேடும்? சர்வேசுவரன் பெயர் சொல்லி தொந்தி குறையாமலிருக்கும் வழிகளை நாடும்? வாய்மூடி 'சிவ, சிவ' என்று இருப்பார்களே!!

ஏதோ இப்படியெல்லாம், பெரிய பெரிய பதவிகளில் இருந்தவர்களும், சமூகத்தில் எப்படியோ உயர்நிலை பெற்றுவிட்டவர்களும், இதுபோன்ற 'சத்' காரியத்தில் இறங்குவதும், அதைக்காட்டிப் பக்திப்பாதைக்கு மெருகு தேட முனைவதும், பழக்கமாகியே வருகிறது. வேண்டுமானால், இம்முயற்சி, 'பென்ஷன்தாரி'களுக்கு ஒரு பொழுதுபோக்காகலாமே ஒழிய, உண்மையிலேயே மதத்துறையினை வளர்க்கும் மார்க்கமாகிவிடாது! இதுபோன்ற மேடைகளில், பிரசங்கமாரி பொழிந்துவிட்டு, வீட்டுக்குப் போனதும் வேலைக்காரன் வேலைக்காரிகளை விரட்டிடும் ஆத்மாக்கள் அநேகம் உண்டு நாட்டில்!!

(13-ம் பக்கம் பார்க்க)

சிந்தனைக்கு

பிரிட்டிஷ் பிரதமர்கள்

பிரிட்டிஷ் பிரதமர் பதவி உலகத்தில் மிக முக்கியமான பதவியாகக் கருதப்படுகிறது. அமெரிக்காவின் ஜனாதிபதி, ரஷ்யாவின் பிரதமர், ஆகியவைகளுக்குச் சமமான மதிப்பினை உடைய பதவியாகும் இது. பிரிட்டிஷ் பிரதமராக எவர் வருகிறார், அவருடைய தகுதிகள் யாவை, அவர் எந்தக்கட்சி, முதலியவைகளை உலகம் வெகு ஆவலோடு கவனிக்கிறது. சேம்பர்லினும், சர்ச்சிலும் பிரிட்டிஷ் பிரதமர்களாக இருந்த காலத்தில், அவர்களால் அப்பதவியின் சிறப்பு மேலும் ஒரு படி உயர்ந்தது. பிரிட்டிஷ் பிரதமர்களாக இருந்த சிலர், ஜனநாயகப் பண்புகள் பலவற்றை உருவாக்கியுள்ளனர். ஜனநாயகத்தின் பிறப்பிடமான இங்கிலாந்தின் பிரதமர்கள் அப்பதவி பெறுவதற்கு முன்னால் மக்கள் சபையான ஹவுஸ் ஆப் காமன்ஸில் (House of Commons) பல ஆண்டுகள் அங்கத்தினர்களாக இருந்திருப்பார்கள்; பிறகு சிறு சிறு பதவிகளையும், அதன்பின் மந்திரிப் பதவியையும், அதற்குப் பிறகு துணைப் பிரதமர் பதவியும் வகிப்பார்கள். அதன் பிறகே பிரதமர் பதவிக்கு உயர்த்தப்படுவார்கள். இந்த நல்ல ஜனநாயகப் பண்பு, எல்லா நாடுகளிலும் பின்பற்றப்படுவது கிடையாது. ஆகவேதான் இங்கிலாந்தின் அரசியலில் குழப்பத்தையும், கூச்சலையும் அதிகமாகக் காண முடிவதில்லை. அமைதியான, ஆற்றொட்டமான அரசியல் அங்கு நடைபெற்று வருகிறது.

சாதாரணமாக, பொதுத் தொண்டு புரியும் ஒரு மன்றத்தையே எடுத்துக்கொள்வோம். அந்த மன்றத்தில் செயற்குழு உறுப்பினராக ஆவதற்கு முன்னால் ஒரு நபர் அம்மன்றத்தில் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து அங்கத்தினராக இருந்திருக்கவேண்டும் என்ற ஒரு ஏற்பாடு இருக்கவேண்டும். ஏனெனில் இரண்டு ஆண்டுகள் அங்கத்தினராக இருந்த பிறகு அம்மன்றத்தின் கொள்கைகள், அது செயலாற்றும் வழிவகைகள், மற்ற அங்கத்தினர்களின் உள்ளப் பாங்கு முதலியவற்றை அவரால் அறிந்து கொள்ளமுடியும்; மன்றமும் ஒழுங்கான முறையில் இயங்க முடியும். அதேபோலத்தான் குறைந்தது மூன்று ஆண்டுகள் செயற்குழு உறுப்பினராக இருந்தவர் தான் செயலாளராக வரமுடியும் என்ற ஒருமுறை இருந்தால், அவர் எவ்வளவு ஒழுங்காக வேலை செய்வார் என்பதை நினைத்துப் பாருங்கள்!

நா. ஜகந்நாதன், எம். ஏ.,

இங்கிலாந்தின் வரலாற்றைப் பார்த்தால், ஒருவர் முதல் அமைச்சராக வருவதற்குமுன்னர், எத்தனை எத்தனை பதவிகளை வகித்தார், எத்தனை ஆண்டுக்காலம் பாராளுமன்றத்தில் அங்கத்தினர் பதவி வகித்தார் என்பதைத் தெள்ளிதின் அறியலாம். அநுபவமே இல்லாத ஒருவர் மந்திரியாக ஆனது மிகமிகக் குறைவே. பல முதல் அமைச்சர்களின் வரலாற்றைக் கீழே காண்போம்.

பால்போர் (Balfour) என்பவர் முதல் அமைச்சராக வந்தபோது அவருக்கு வயது ஐம்பத்துநான்கு. அவர் 28 ஆண்டுகள் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்த பிறகே இப்பதவி பெற்றார். பானர்மேன் (C Bannerman) என்பவர் தம்முடைய 69-வது வயதில் முதல் அமைச்சரானார்; 37 ஆண்டுகள் பாரளுமன்றத்தில் உறுப்பினர் பதவி வகித்திருந்தார். ஆஸ்க்வித் (Asquith) என்பார் 22 ஆண்டுகள் பாராளுமன்றத்தில் அங்கத்தினராக இருந்த பிறகு தனது 55வது ஆண்டில் இங்கிலாந்தின் அமைச்சரானார்.

டேவிட் லாயிட் ஜார்ஜ் புகழ் பெற்ற முதல் அமைச்சர்களில் ஒருவர். அவர் 25 ஆண்டுகள் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இருந்து, தமது 53-வது ஆண்டில் முதல் மந்திரியாக ஆனார். முதல் மைச்சராவதற்கு முன்னால் அவர் வணிகக் குழுவின் தலைவர் பதவியிலும், நிதி அமைச்சர் பதவியிலும் யுத்தப் பொருள்கள் பற்றிய இலாகா மந்திரிப் பதவியிலும், யுத்த மந்திரியாகவும் பணியாற்றியிருக்கிறார். எவ்வளவு அநுபவங்கள் அவருக்குக் கிடைத்திருக்க வேண்டும் என்பதைக்கூறவேண்டுவதில்லை.

போனர்லா (Bonar Law) என்பவர் தம்முடைய இருபத்தொரு ஆண்டு பாராளுமன்ற அங்கத்தினர் பதவிக்குப் பிறகு முதல் அமைச்சர் பதவி பெற்றார். நடுவில் அவர் பல பதவிகள் வகித்திருக்கிறார். அவற்றுள் முக்கியமானவை வணிகக்குழுவின் பாராளுமன்றச்செயலாளர் (Parliamentary Secretary of Board of Trade) காலனிகள்பற்றியஇலாகாச் செயலாளர் (Secretary of State for Colonies) நிதி மந்திரி, லார்டு ப்ரைவிஸீல் (Lord Privy Seal) மக்கள் சபையின் தலைவர் (Leader of the House of Commons) என்பனவாம். இவர் இத்தனை பதவிகள் வகித்தபோது பெற்ற அநுபவம் முதல் அமைச்சர் பதவி வகித்தபோது துணைபுரிந்தது.

பால்ட்வின் (Baldwin) என்பார் பதினைந்து ஆண்டுகள் பார்லிமெண்டில் அங்கத்தினராக இருந்து, பிறகு தம் 55வது வயதில் முதல் அமைச்சரானார். அதேபோல் மாக்டனல்ட் (Mac Donald) என்பாரும் மதினான்கு ஆண்டுகள் பாராளுமன்றத்தில் அங்கத்தினராக இருந்த பிறகு தமது 57வது வயதில் முதல் அமைச்சரானார். அடுத்துப் பிரதமரானவர் சேம்பர்லேன் ஆவார். உலகப் புகழ் பெற்ற இவர் பத்தொன்பது ஆண்டுகளே பாராளுமன்றத்தில் இருந்தார்; தம்முடைய 67வது வயதில் முதல் அமைச்சர் ஆனார். அவர் அதற்கு முன்னர் தேசிய சர்வீஸ் டைரக்டர் ஜெனரலாகவும் (Director General of National Service) போஸ்ட் மாஸ்டர் ஜென

லாகவும், பே மாஸ்டர் ஜெனரலாகவும்(Pay master General) சுகாதார மந்திரியாகவும், நிதி மந்திரியாகவும் இருந்திருக்கிறார்.

உலகத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் பேறு பெற்ற சில மாபெரும் தலைவர்களில்வின்ஸ்டன்சர்ச்சிலும் ஒருவர். தமது எண்பதாவது வயதிலும் அண்மையில் பாராளுமன்றத்துத் தேர்தலுக்கு நிற்கப் போகிறேன் என்று கூறியவர். இரண்டாவது உலகப் பெரும் போரின் திறமை வாய்ந்த முதல் அமைச்சராக இருந்து இங்கிலாந்தின் மானத்தைக் காத்த மாவீரன்; இலண்டன் நகரமே பற்றியெரிந்த போதும் மனம் குலையாத திடம் கொண்டு திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்த பெரும் தலைவர். அவர் 38 ஆண்டுகள் பாராளுமன்றத்தில் அங்கத்தினராக இருந்த பிறகு தமது 65வது வயதில் இங்கிலாந்தின் முதல் அமைச்சரானார். அவர் இப்பதவி பெறுமுன் பல பல பதவிகளில் இருந்து நல்ல அநுபவங்கள் பெற்றார்.

காலனிகள் பற்றிய இலாகாவின் துணைச் செயலாளர் (Under Secretary of State for the Colonies) வணிகக் குழுவின் தலைவர், உள்துறை இலாகாவின் செயலாளர், (Secretary of State for Home Affairs) கப்பற்படையின் முதல்வர், யுத்தப் பொருள்களின் மந்திரி, யுத்த இலாகாச் செயலாளர், விமான இலாகாச் செயலாளர், காலனிகள் இலாகா செயலாளர், நிதி மந்திரி, இன்னும் பல சில்லறைப் பதவிகள் முதலியவற்றில் இருந்து, நிறைய அநுபவங்கள் பெற்ற பின்னரே முதல் அமைச்சரானார். [illegible] எடுப்பிலேயே இவர் முதன் மந்திரி ஆகியிருந்தால் இரண்டாம் உலகப் போரில் இங்கிலாந்தின் கதி என்னவாகி இருக்கும்? எவ்வளவுதான் திறமை வாய்ந்தவராய் இருந்தாலும், பற்பல துறைகளின் மூலம் அநுபவம் பெற்றால்தான் முதன் மந்திரியாக வெற்றிபெற முடியும் என்பதை வின்ஸ்டன் சர்ச்சிலின் வாழ்க்கை வரலாறு கூறுகிறது.

சர்ச்சிலுக்குப்பின் பதவியேற்ற க்ளமெண்ட் ஆட்லியும் அவரைப் போன்றே பல துறைகளில் அநுபவம் பெற்றவராவார். அவர் 23-ஆண்டுகள் பார்லிமெண்ட்டில் அங்கத்தினராக இருந்த பிறகு, தமது 62-வது வயதில் முதல் அமைச்சரானார். யுத்த இலாகாவின் துணைச் செயலாளராகவும், போஸ்ட்மாஸ்டர் ஜெனரலாகவும், லார்டு ப்ரைவி ஸீலாகவும் (Lord Privy Seal) டொமினியன்கள் இலாகாவின் செயலாளராகவும், கௌன்ஸிலின் தலைவராகவும், சர்ச்சிலின்கீழ் துணைப் பிரதம மந்திரியாகவும் இருந்து நல்ல அநுபவங்கள் பெற்றார். அதன் பிறகே அவர் பிரிட்டிஷ் பிரதமரானார். அதிலும் இரண்டாவது உலகப் பெரும் போரை வெற்றிகரமாக நடத்திக் கொடுத்த சர்ச்சிலின் கட்சியான கன்ஸர்வேடிவ் கட்சியை உடனடியாகத் தோற்கடித்த பிறகு இவரது கட்சி—தொழிற்கட்சி—பதவியேற்றதும், இவரே முதன் மந்திரியானார்.

அண்மையில் பதவி துறந்த ஈடனும் நல்ல அநுபவங்கள் பல பெற்ற பிறகே முதல் அமைச்சரானார். இருவம் 32-ஆண்டுகள் பாராளுமன்றத்தில் அங்கத்தினராக இருந்த பிறகு, தமது 57-வது வயதில் பிரதம மந்திரியானார். வெளிநாட்டு இலாகா மந்திரியின் அந்தரங்கச் செயலாளர், அதே இலாகாவில் துணைச் செயலாளர், லார்டு ப்ரைவி சீல், சர்வதேசச் சங்கத்தைக் கவனிக்கும் மந்திரி, வெளிநாட்டு இலாகா அமைச்சர், டொமினியன்கள் இலாகாவின் செயலாளர், யுத்த இலாகாச் செயலாளர், மக்கள் சபை (House of Cammons)யின் தலைவர், துணைப் பிரதம மந்திரி முதலிய பதவிகளில் இருந்தார்; அதன் பிறகு பிரதமரானார். இவ்வளவு துறைகளில் அநுபவம் பெற்றிருந்தும், இவர் எகிப்து பிரச்னையில் ஆழம் தெரியாது, காலைவிட்டுப் பதவியை விட்டு ஓட நேர்ந்தது எனில், அநுபவமே இல்லாத மந்திரிகளின் கதி என்னவது என்பதை உங்கள் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.

மேற்கூறிய பல முதல் அமைச்சர்களின் வாழ்க்கைச் சுவடுகள் நமக்கு வலியுறுத்துவது என்ன என்றால், யாரும் பதினைந்து ஆண்டுகளுக்குக் குறைவாகப் பாராளுமன்றத்தில் அங்கத்தினராக இல்லாமல், பிரதம மந்திரியாக ஆனதில்லை; 55-வயதிற்குக் குறைவாக யாரும் முதல் அமைச்சராக முடியவில்லை. பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் — ஜனநாயகத்தின் தொட்டிலான — இங்கிலாந்தின் பார்லிமெண்டில் ஒருவர் பதினைந்து ஆண்டுகள் அங்கத்தினராக இருந்திருக்கிறார் என்றால், அவர் தம்முடைய பதவியில் எவ்வளவு வெற்றிகள் பெறமுடியும் என்பதைச் சரித்திரம் படித்தவர்களால் நன்கு உணர முடிகிறது; அதேபோல்தான் நல்ல முதிர்ந்த வயதான, ஐம்பத்தைந்து வயதில் ஒருவர் முதல் அமைச்சராவது எவ்வளவு வெற்றிகரமானது என்பதையும் குறிப்பிடுவது நல்லது.

அநுபவமே இல்லாதவர்கள். வயதிலும், அறிவிலும் குறைந்தவர்கள் மாபெரும் தலைவர்களாக ஆனதில்லை, வரலாற்றில் ஆதாரமில்லை என்றும் கூறுவதற்கு இடமில்லை. அத்தகையோர் மிக மிகக் குறைவு. பழுத்த அநுபவமும், அரசியல் அறிவும், வயதுக் காலத்தில் கிடைத்த எண்ணற்ற நிகழ்ச்சிகளின் அநுபவமும் ஒரு முதல் அமைச்சருக்கு எத்துணை தேவை என்பதைப் பிரிட்டிஷ் முதல் அமைச்சர்களின் வாழ்க்கை வரலாறு தெளிவாகக் காட்டுகிறது.

ஜனநாயகம் குழந்தைப் பருவத்தில் தவழும் நாட்டில், நல்ல ஜனநாயகப் பண்புகளை — மக்களாட்சிக் கொள்கைகளை — உருவாக்கி, வலுவாக்கி, மக்களாட்சி செழிப்பாக நடக்க ஆட்சியிலுள்ளோர் முயலவேண்டும்.

எடுத்த எடுப்பில் -- குருடனுக்குப் புதையல் கிடைத்ததுபோல்- சிலருக்கு முதலமைச்சர் கிடைத்துவிடுவதையும், அனுபவமற்றவர்கள் — ஆளுந் திறனில்லாதவர்கள் —அநுமபு [illegible] ம்சையினர் — அரிச்சுவடி அறியாதார், ஆகிய இன்னா பிறருக்கு அந்தப் பதவி கிடைத்துவிடுவதையும், அதனால் எடுத்தேன், கவிழ்த்தேன் என்று அலங்கோல ஆட்சி புரிவதையும் காணமுடிகிறதல்லவா இந்நாட்களில் — இங்கும் வேறுபல நாடுகளிலும்; அவர்களின் சிந்தனைக்கு இக்கட்டுரை பயன்பட வேண்டுமென்று ஜனநாயகத்தில்நம்பிக்கை கொண்ட எவரும் கூறத் தயங்க மாட்டார்கள் என்பது எமது துணிபு.

பாடம் கற்றுக்கொடுத்த பாவை!

வி. ஆர். துரை

அவன் படுக்கையிலிருந்து சலிப்போடு எழுந்தான். அவனிரு கைகளும் கண்களைத் தேய்த்துக் கொண்டே இருந்தன. அதற்குள் தவளையைப்போல ஆறேழு முறை, அகலமாக வாயைத் திறந்து மூடினான். என்றைக்கும் பத்துமணிக்குத் துயிலெழுந்து, பல் துலக்கப் பழகிக்கொண்ட அவனுக்கு, இன்றைக்கு மூன்றரை மணிக்கே கட்டாயம் எழுந்திருக்க வேண்டுமென்றால், மிகவும் கஷ்டமாகத்தானே இருக்கும்!

எது பிடிக்காவிட்டாலும் அவனுக்கு உறங்குவதென்றால் மிகவும் பிடிக்கும். எல்லாவற்றையும் மூட்டை கட்டிவிட்டு நன்றாகத் தூங்குவான். அதன் மேல் அளவு கடந்த ஆசையும் அவன் கொண்டிருந்தான்! தூக்கத்தில் தன்னை எழுப்பித் தொல்லைதராத தோழர்களுக்குப் பரிசு கொடுக்கவும் அவன் தயாராக இருந்தான். தூங்குமூஞ்சி என்பதல்ல அவன் பெயர்; இன்பசாகரன் என்றுதான் அனைவரும் அழைத்தார்கள். அந்தப் பெயரும் ஒரு வகையில் பொருத்தமே! பெறறவர்களின் நிலை அவன் பிறந்த நேரத்தில், இன்பமாக இருந்திருக்கவேண்டும்!

அதிகாலையில் எழுகின்றவர்களைக் கண்டால், அறவே அவனுக்குப்பிடிக்காது. அவர்களை எல்லாம் சுத்த சோம்பேறிகள் என்று வர்ணிப்பான். முட்டாளுக்கு முட்டாள்தானே சரியானஜோடி! "அதிகாலையில் எதற்காக எழுந்து கொள்ளவேண்டும்? அப்படி என்ன வேலை இருக்கிறது? அநியாயமாக உடம்பை ஏன்கெடுத்துக் கொள்ளவேண்டும்? யாக்கைக்குத் தூக்கத்தைப்போல இன்றியமையாத மருந்து, வேறொன்றும் இல்லை என்ற சாதாரண உண்மைகூட, உங்களுக்கெல்லாம் தெரியாமல் இருக்கின்றதே!'' அடிக்கடி நண்பர்களிடையே இப்படி ஒரு குட்டிப் பிரசங்கம் அவன்செய்துகொண்டே இருப்பான். இன்பசாகரனைத் தெரிந்தவர்களுக்கு இது ஒன்றும் ஆச்சரியம் இல்லை.

மூன்றரை மணிக்கே அன்றைக்கு எழுந்துகொண்டான். முகத்திலே மங்கையைப்போல் பவுடரைப் போட்டுத் தேய்த்துக்கொண்டான். பெட்டியிலிருந்து நல்ல ஆடைகளைத் தேர்ந்தெடுத்து நன்றாக உடுத்திக்கொண்டான். தண்ணீரும் எண்ணெயும் கலந்து தடவி, அரைமணி நேரமாகச் சீவியும் படியாத தலை, கடைசியில் சுமாராக வந்து சேர்ந்தது.

இரவு நேரத்தில் அலங்காரம்! ஏதாவதொரு விசேஷம் இருக்கத்தானே செய்யும்! கடற்கரை மணலில் வந்து ஒரு ஓவியப்பாவை, கால் வலிக்கக் காத்திருப்பாள்; இவன் அழகிலே சொக்கிவிட்ட மங்கை எவளாவது, பூங்காவிலே வந்து ஏங்கிக்கொண்டிருப்பாள்; அல்லது மாந்தோப்பிலே ஒரு மலர் மேனியாள் விழிகளை இமைக்காமல் மரத்தோடு மரமாக மறைந்த வண்ணம் நின்றிருப்பாள். இந்த வயதிலே வேறெதற்கு இவ்வளவு மதிப்புத் தந்து, சுறுசுறுப்பாக அவன் கிளம்புவான்? பாதி தூக்கத்திலும் புத்தகத்தில் கண்களை வைத்துக்கொண்டிருந்த நண்பர்களும், இப்படித்தான் கேலி செய்தார்கள். அதற்கென்றே தெருத் தெருவாக அவன் அலைவதை, அந்த விடுதியிலே தங்கியிருக்கின்ற நண்பர்கள், நேரிலேயே அல்லவா பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் அவன் சட்டை செய்யவில்லை; செவியிலே போட்டுக் கொள்ளவில்லை.

அவனுக்கும் ஒருதந்தை உண்டு; இன்னுமவர் உயிரோடுதான் இருந்தார்!! பெட்டியிலிருக்கின்ற பணமெல்லாம், தன்னுடைய மகன் படிப்பதாலேயேபாழாகிறதுஎன்று அவர் வருத்தப்பட்டார்; வேதனை அடைந்தார். ஒரு மகனுக்குத் தந்தைசெய்யவேண்டிய உதவியை அவ்வளவு நன்றாக அவர்தெரிந்து வைத்துக்கொண்டிருந்தார்.

எப்படியோ ஐந்து புதுக்காசுகளை மனம் வந்து தாராளமாகச் செலவு செய்து, ஒரு கடிதம் எழுதி விட்டிருந்தார். அதில், "நல்லதாகப் பார்த்து குறைந்த விலையில் ஒரு ஜதை செருப்பு எனக்கு வாங்கிக்கொண்டு, ஐந்து மணிக்கே புறப்படுகின்ற வண்டியிலேறி, ஒரு மணிக்கெல்லாம் நேராக ஊர் வந்து சேரவும்'' என்று உத்தரவு போட்டிருந்தார். அப்படியே மகனும் உடனடியாகப்புறப்பட்டுவிட்டான்.

அவனுக்கு என்னவோ சென்னையை விட்டுச் செல்வதற்கு விருப்பமில்லை; வெறுப்பாகத்தான் இருந்தது. ஆனாலும் என்ன செய்வது? போகாமல் நின்றுவிட்டாலோ, பட்டணத்திலே ஆகின்ற செலவுக்குப் பணம் அனுப்பாமல், ஒரு பெரிய முற்றுப்புள்ளியைத் தந்தை நிச்சயமாக வைத்துவிடுவார் என்பதில் ஐயமில்லை. அவனுடைய தந்தையின் புத்தி அவனுக்கல்லவா நன்றாகத் தெரியும்! எனவேதான் யோசிக்காமல் சலிப்போடு பிரயாணத்தைத் துவக்கிவிட்டான்.

அவ்வளவு வெளிச்சமாகவும் இல்லை. ஒரே இருட்டாகவும் இல்லை. இரண்டிற்கும் தட்டுப்படாத நிலையிலே, அப்போதைய நேரமிருந்தது. யாரோ ஒருமனிதன் எதையோ ஒன்றைத், தோளின் மேல் சுமந்துகொண்டு போய்க்கொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து மங்கைஒருத்தி நடந்து சென்றாள். அதற்குப் பின்னால் சிறிது தூரத்தில் இன்பசாகரன் போய்க்கொண்டிருந்தான். ஒரு அட்டைப்பெட்டி அவன் கையிலே இருந்தது. அதிலிரண்டு செருப்புகள் இருந்தன. அவை இரண்டும் அவன் தந்தைக்கு வாங்கப்பட்டவையாகும். அதைக் கையிலே சுமந்துகொண்டு வரும்போது, கொஞ்சம் வேதனையாகவே இருந்தது.

ஒரு பெரிய பாலத்தின் மீது அவர்கள் நடந்துகொண்டிருந்தார்கள். அப்போது பொழுது விடிந்துவிட்டிருந்தது. அடியிலே தண்ணீர் கறுப்பாகப் போய்க்கொண்டிருந்தது. அங்கிருந்து சென்ட்ரல் ஸ்டேஷன் அருகில்தான் இருந்தது. "என்னங்க, இங்கிருந்து பிராட்வேய்க்கு எப்படிப்போகணும்?" அந்த இளம்பெண் கேட்டாள். திரும்பிப்பாராமலேயே அந்த மனிதன், இப்படிப்போய் அப்படித் திரும்பி, அந்த வழியாகப் போகவேண்டுமென்றாவது சொல்லாமல், "நடந்துதான் போகவேண்டும்" என்று கூறிவிட்டு வேறு வழியிலே திரும்பிவிட்டான். அவள் அங்கேயே ஒன்றும் புரியாது செய்வதறியாது திகைத்து நின்றாள்.

பெண்ணின் குரல் கேட்டதுமே, இன்பசாகரனின் நடையில் வேகம் ஏற்பட்டது. ஆணாக இருந்திருந்தால் அவ்வளவு அக்கரை எடுத்துக்கொண்டிருக்கமாட்டான். அவளுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதல்ல அவன் எண்ணம். பக்குவமாக அவளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே அவன் திட்டம்! அந்தத் தோகை மயிலாளை அவன் நெருங்கிவிட்டான். அவனாகவே முதலில் பேச விரும்பவில்லை; அவளாகப் பேசவேண்டும் என்று ஆசைப்பட்டான். இப்படி ஒரு ஜம்பம்! வாலிபனைக் கண்டதுமே வனிதை அவள் மிரண்டாள். ஆயினும் அவனைக் கொண்டே தான் செல்லவேண்டிய இடத்தை, அடைந்துவிட வேண்டுமென்று நெஞ்சிலே நினைத்தாள். உலகம் அறியாச் சிறு பெண்! வேடனையா அழகுப்புறா நம்புவது? அம்பால் அவன் கொல்லாமல் விடுவானா?

அந்தச் சிங்காரச் சிட்டுப் பிறந்தது சென்னையிலேதான். வளர்ந்ததும், இப்பொழுது வாழ்வதும் அங்கேதான். என்றாலும் வீட்டைவிட்டு வெளியே வந்து அறியாதவள். நல்ல பெண்! அவளுக்கு ஒரு அண்ணன் உண்டு. அண்ணிக்கோ நல்ல குணங்கள் என்பது இன்னதென்றே தெரியாது! அண்ணியின் கைப்பாவை அண்ணன். பேணி வளர்க்கவேண்டிய தாயும் தந்தையும், இந்த உலகத்தில் இருக்க விருப்பமில்லாமல் சாவூருக்குப் போய்விட்டிருந்தார்கள். பெற்ற அவர்களுக்கல்லவா மகளின் அருமை பெருமை தெரியும்.

சிரிக்கும் சிலையாய், சிங்காரச் சித்திரமாய், பாடிவரும் தென்றலாய், பார்ப்பவர் மனதைச் சுண்டி இழுக்கும் பருவ மயிலாய்—எழில் கன்னியாய்க் காட்சியளிக்கும் தன்மகளை, இன்னும் அவர்கள் உயிரோடு இருந்திருந்தால், பார்த்துப் பார்த்து எவ்வளவு பூரிப்பு அடைந்திருப்பார்கள். ஆதரவற்ற நிலையிலே ஒரு பெண் தவிக்கும்படி, அநியாயமாக இயற்கை ஏன் அவர்களின் உயிர்களை, இரக்கமில்லாமல் பிடுங்கிக் கொள்ள வேண்டும்? அந்தப் பேதைப் பெண் அண்ணனின் ஆதரவிலே அடக்க ஒடுக்கமாகவே இருந்து வந்தாள்.

ஒரே தொல்லை. அண்ணனும்' அவனை ஆட்டி வைக்கும் அண்ணியும், கொடுக்கின்ற துன்பத்தை அவளால் தாங்க முடியவில்லை. எல்லோரும் செய்கின்ற தவறைத்தான் பருவமடைந்த அவளும் செய்துவிட்டாள். அதற்காக அப்படியா வாட்டுவது? அன்று இரவு முழுதும் ஒரே சண்டை. அடிக்கவும் செய்தார்கள். ஒருத்தியை அன்பால் வெல்லலாம். அடித்தா தன்னுடைய வழிக்குக் கொண்டுவர முடியும்? அன்பால் சாதிக்க முடியாத ஒன்றை, அடிப்பதால் வென்றுவிட முடியும் என்று நினைப்பது, எவ்வள மடைத்தனம் என்பதை உணர வேண்டும். அடிப்பதும் உதைப்பதும் அடாத செயல். பெரிய கொடுமை!

அநியாயமாக ஒரு உயிரைக் கொல்லச் சொல்லுகிறார்கள். அந்த அக்கிரமத்தை எப்படி அவளால் மனம் வந்து செய்யமுடியும்? தளரும் அந்த உயிரைத்தான் தன் வாழ்வின் விடிவெள்ளி—நல்முத்து என்றவள் கருதிக் கொண்டிருக்கிறாள். அந்த உயிரை அழித்துவிட வேண்டுமாம்; அவர்கள் காட்டுகின்ற ஆளை விரும்பி மணம் செய்துகொள்ள வேண்டுமாம்! அதனால் இவர்களுக்கு நல்ல இலாபம் இருந்தது. அந்தக் காட்டாற்றில் விழுந்து, தன் வாழ்வைப் பாழாக்கிக்கொள்ள அவள் தயாராக இல்லை; விரும்பவில்லை. பளிங்கு மண்டபமாக இருந்த அவள் உள்ளம், பாழடைந்த கோயிலாகிவிட்டது. வீட்டைவிட்டே துணிச்சலாக வெளியேறிவிட்டாள். குளம் குட்டையை நாடி அவள் செல்லவில்லை. வேதனையின் மடியிலே விழுந்து வாடி வதங்கும் அவள், வேறெங்கு செல்லுகின்றாள்? எவரையாவது நாடித்தான் செல்லவேண்டும். அந்த மனிதன்—அவள் மாமனைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது. அவர் தன்னை ஆதரிப்பார் என்று அவள் திடமாக நம்பினாள்.

"இந்த நாய் எங்கே போகும்? யார் சேர்த்துக்கொள்வார்கள்? எப்படிப் பிழைக்கமுடியும்? வேறுவழி இல்லாமல் திரும்பவும் இந்த வீட்டு வாயிற்படியை வந்து மிதிக்கும்போது, கழுதையைக் காலால் எட்டி உதைக்கவேண்டும்"

சீறினான் அண்ணன். சிரித்தாள் அண்ணி. அவள் செவியிலேயும் அது விழுந்தது. இரண்டு காதையும் கெட்டியாக அடைத்துக் கொண்டாள். இனியும் அவள் நிச்சயமாகத் திரும்பமாட்டாள். மானம் தானே பெரிது!

அவர்களின் உளறல் ஏமாற்றத்தின் எதிரொலி! போட்டதிட்டம் பாழாகிவிட்டதால் வந்த எரிச்சல்! எப்படியும் பெண்ணை உனக்கே ஏற்பாடு செய்கிறோம் என்று, ஒரு மூளைகெட்டவனிடம் பணம் வாங்கி இருந்தார்கள். அவன் வந்து இப்பொழுது உதைத்தால், என்ன செய்வது என்று அஞ்சியதால் எழுப்பிய ஆலோலம். இதயமற்ற அந்த மாமிசப் பிண்டங்களின் எண்ணப்படியே, நடந்துவிடக்கூடாதென்று அவள் அழுதாள். அழுதுகொண்டே வெளியேறிய அவள், நேராக இன்பசாகரனின் கையிலே வந்து விழுந்தாள்,

பருவத்தின் எழில் குலுங்கும் ஒரு பாவை, பசிகொண்ட வாலிபனிடமிருந்து நல்ல வழியிலே உதவி பெறலாம் என்று நினைப்பது, எவ்வளவு பெரிய தவறென்பதை அவள் உணரவில்லை. பயமறியா இளங்கன்று! புள்ளிமான் குட்டி! புதுமைப் பெண்! கஷ்டப்படாமலே இப்படி ஒருகனி கிடைக்கிறதே, என்று அவன் உள்ளம்மகிழ்சியால் குதித்துக் கொண்டிருந்தது. இன்றைக்கு நண்பர்களின் முகத்தில் விழிக்காததே, இந்த அதிர்ஷ்டத்திற்குக் காரணம் என்றும் எண்ணினான். முட்டாள் தனமான பழக்க வழக்கங்களின் அடிமை!

•

"என்னங்க...உங்கள தாங்கோ!"

"யாரது? என்ன வேணும்?"

"எனக்கு ஒன்றும் வேண்டாம். பிராட்வேயிலே இருக்கின்ற பாலிடெக்னிக் வரையில் போகவேண்டும். எப்படிப் போகவேண்டும் என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியுமா?" பயப்படாமல் பேசினாள்.

"அந்த வழியாகத்தான் நானும் போகவேண்டும். அங்கேதான் எனக்கும் கொஞ்சம் வேலை இருக்கிறது. என் பின்னாலேயே வந்தால் காட்டுகின்றேன்" தடுமாறாமல் ஒரு பெரிய பொதியை மனதிலிருந்து இறந்துவிட்டான்.

"தங்களுக்கு என் நன்றி! என்றைக்கும் உங்கள் உதவியை என்னால் மறக்க முடியாது!"

"இதற்கு ஒரு நன்றியா? அதை இப்பொழுதே சொல்லிவிட்டால் எப்படி? இன்னும் எவ்வளவோ விவகாரம் இருக்கிறதே!" அவள் முகம் சற்று மாறியது. அவசரப்பட்டுத் தவறு செய்துவிட்டதாக அவன் உணர்ந்தான்.

"ஆமா, நீ இந்த ஊரா? உன் சொந்த ஊர் எது?"

"நான் பிறந்ததும் வளர்ந்ததும் இந்த நகரம்தான். எவ்வளவோ மனவருத்தம். இப்படிப் புறப்பட்டு விட்டேன்."

"ஆச்சரியம்! இங்கே பிறந்த நீ சென்னையைச் சரிவரத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறாயே! இப்படியா ஒரு பெண் தனியாகக் கிளம்புவது? அதுவும் இந்தச் சென்னையிலே!" முதன் முதலாக அவள் சிரித்தாள். மீண்டும் அந்தப் புன்னகையை அவள் முகத்தில் பார்க்க அவன் ஏங்கினான்.

"என்ன செய்வது? 'இப்படியெல்லாம் சென்னையின் தெருக்களிலே, நான் அலையவேண்டி ஏற்பட்டு விட்டது."

"ஒன்றைக் கேட்கலாம் என்று ஆரம்பத்திலேயே நினைத்தேன்; மறந்துவிட்டேன். அங்கே யாரைத் தேடிப்போகிறீர்கள்?" மரியாதை கலந்து கேட்டான்.

"என் மாமா அங்கேதான் வேலை செய்கிறார். அவருக்கு என்மேலே உயிர். அவரைப் பார்க்கத்தான் போகின்றேன்" அவனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. மாமாவா? நெற்றியிலே சரியாகப் போட்டுக் கொண்டோம் நாமம் என்று சோர்வடைந்தான்.

"என்ன, உனக்குத் திருமணமாகிவிட்டதா? இதை அப்போதே சொல்லக் கூடாதா?"

"இல்லை, இல்லை! இறந்துவிட்ட என் தாயுடன் பிறந்தவரைத்தான் கூறினேன்" இப்படிக் கேட்டதும் சில்லென்று அவன் மனம் குளிர்ந்தது.

முகம் திங்களாகத்தான் இருக்கிறது. முகத்தில் ஆடும் விழிகளும் கயலாகத்தான் இருக்கின்றன. மற்றைய அவளின் உடலழகு முழுவதையும், அவனால்கண்டு இரசிக்க முடியவில்லை; நன்றாக மூடிக்கொண்டிருந்தாள்--ஒரு போர்வையால்! அவளை நன்றாகப் பார்க்க வேண்டும், அழகை அள்ளிப் பருக வேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான். எப்படி முடியும்? அழகு நிலா முகமும் மை உண்ட அம்பு விழிகளும், ஒரு பெண்ணிற்கு கவர்ச்சியாக இருந்தால் போதுமா? ஒரு சமயம், அவள் போர்வையை எடுத்துவிட்டால் அவலட்சணமாக இருப்பாளா? இப்படியும் அவன் குரங்கு மனம் நினைத்தது. ஒருக்காலும் அப்படி இருக்காது என்று அவன், தன்னைத்தானே உற்சாகப் படுத்திக்கொண்டான்.

ஒருவர்மீது அளவுகடந்த பற்று ஏற்பட்டுவிட்டால், அவரிடம் வாழ்கின்ற கெட்ட குணங்கள் தெரிவதே இல்லை, நல்ல குணங்களைப் பற்றித்தான் திரும்பத் திரும்பப்பேசிக்கொண்டிருக்கிறோம். அந்த வியாதியைச் சேர்ந்ததுதான் இதுவும்! அவள் தமிழை இனிமை சொட்ட வாய் மணக்க செவி குளிரப் பேசினாள்.

வந்து நின்ற பஸ்ஸில் ஒரு இடமே இருந்தது. இன்பசாகரனும் அவளும் ஏறவில்லை. இரண்டு பேருமே அடுத்த வண்டியில் ஏறிக் கொண்டார்கள். அவன் சீட்டில் உட்கார்ந்தான். கம்பியிலே தொங்கிக் கொண்டிருந்த தோல் பட்டையைப் பிடித்துகொண்டு, கன்னி அவள் நின்றாள். மெதுவாக அவளின் செவியில் மட்டுமே விழும்படி, 'உட்காரு' என்று கூறி வேண்டினான். பதிலும் அவள் சொல்லாமல், பக்கத்தில் இடமிருந்தும் உட்காராமல், பேசாமலேயே நின்றிருந்தாள். அவன் கோபமாகப் பார்த்தான். அதற்கவள் பயந்து உட்கார்ந்துகொண்டாள். அப்போதும் சிறிது தள்ளியேதான் அவள் அமர்ந்தாள், அவனோ நெருங்கி நெருங்கி வந்துகொண்டே இருந்தான். அவளுக்கு இதுபெரிய எரிச்சலாக இருந்தது. பெண், நிலத்தைப் போன்று பொறுமையானவள் என்பதைக் காட்டிக்கொண்டாள். வீசும் காற்றும் அவனுக்குச் சாதகமாகவே இருந்தது. அவளின் திருமேனியைத் தொட்டுத் தடவிக் கொண்டிருந்த ஆடைகள், அவன் மேலாடி எங்கோ அவனைச் சஞ்சரிக்க வைத்தது. ஆடை வந்து விழுவதை, அவளே மேலே வந்து விழுவதாக அவன் எண்ணிப் பூரித்தான்.

அவன் இறங்கினான். அவளும் இறங்கினாள். முன்னாலே அவன் நடந்தான். பின்னாலே அவள் போனாள். நீண்ட தூரம் நடந்து பழக்கமில்லாத அவளின் கால்கள் வலித்தன. உட்கார்ந்து கொண்டாள். 'ஏன், என்று அவன் திரும்பி வந்து, சைகையால் கேட்டான். அவளும் பேசாமல் 'ஒன்றுமில்லை' என்று கையிலே காட்டினாள்.

"கால் வலிக்கிறது. நடக்க முடியவில்லை. இன்னும், எவ்வளவு தூரம் இருக்கிறது?"

"அப்படியென்றால், கால் வலி பறக்கின்ற மாதிரி, நான் ஒரு காரியம் செய்யட்டுமா?"

"பரவாயில்லை பரவாயில்லை! அவ்வளவு சிரமம் தங்களுக்கு வேண்டாம்!"

"என்னைப்பற்றித் தவறாக ஒன்றும் நினைக்க வேண்டியதில்லை. பஸ்கட்டணத்தை முந்திக்கொண்டு

கொடுத்ததற்காக, நான் மிகவும் வருந்துகிறேன்,''

"நீங்கள் மிகவும் நல்லவர். அப்படி நான் கொடுத்துவிட்டதில் என்ன தவறு? வேண்டுமானல் எனக்கு நீங்கள் காசைக்கொடுத்து விடுங்கள். வாங்கிக் கொள்ளுகின்றேன்''

"எனக்குப் பசியாக இருக்கிறது. நீ மனம் வைத்தால்...!''

"மன்னிக்கவும். இங்கேயே நான் உட்கார்ந்துகொண்டுஇருக்கிறேன்; சீக்கிரமே நீங்கள் மட்டும் போய்ச் சாப்பிட்டுவிட்டு வாருங்கள்!''

"உனக்காக இவ்வளவு தூரம் நான் அலையும்போது, எனக்காக நீ வரக்கூடாதா?''

"...........''

"ஆமாம், நான் உன்னை எப்படி அழைக்கட்டும்?''

"மல்லிகா என்று கூப்பிடுங்கள். அதுதான் என் பெயர்.''

"வா மல்லிகா! வா போகலாம்! பயப்படாதே! நீ அந்தப் போர்வையை எடுத்து எறிந்துவிட்டு என்னுடன் நடந்தால், எவ்வளவு நன்ருக இருக்கும் தெரியுமா?''

மகிழ்ச்சியோடு அவனும், மன வருத்தத்துடன் அவளும், ஒரு வடநாட்டானின் பிரபல ஓட்டலுக்குள் நுழைந்தார்கள். பலரும் இருக்கின்ற இடத்திலேயே அவள் உட்கார விரும்பினுள். பலவந்தமாக அவனே தனி அறைக்கு அழைத்துச் சென்ருன். அங்கே அவளிடம் தப்பாகநடந்துகொள்ளலாம் என்பது அவன் திட்டம்.

அவன் எதிர்பார்த்தபடி அவள் அமராமல், எதிரில்போய் உட்கார்ந்தாள். சுருங்கியது அவன் முகம். அடிக்கடி சர்வர் வேறு விஜயம் செய்துகொண்டே இருந்தான். அந்தப் போர்வையை எடுத்துவிடும்படி அவன் தீவிரமாக வற்புறுத்தலானுன். முதலில் அவள் பிடிவாதமாக மறுத்தாள் என்ருலும், அவன் தொல்லை தாங்காமல் தனியாக எடுத்து, நாற்காலியின் மேல் போட்டுவிட்டாள். சிலையானுன். அவ்வளவு அழகு! ஓவிய மன்னன் இரவிவர்மாவின் இன்பச் சித்திரம்! அழகு இராணி! ஏன், இவளேயே கல்யாணம் செய்து கொண்டால் என்ன? அந்த அளவுக்கு அவன் முன்னேறினுன். அங்கிருந்து வெளியேறினுர்கள். அமைதியாகவே இருவரும் ஊமை போல் நடந்துகொண்டிருந்தார்கள். வெற்றி கிடைக்கவில்லையே என்ற வருத்தம் அவனைச் சூழ்ந்து கொண்டிருந்தது.

"நான் போகவேண்டும். அவரைப் பார்க்கவேண்டும்.''

"யார் உன்னைப் போக வேண்டாமென்று தடுக்கிருர்கள்? தாராளமாக நீ போகலாம்!''

"உங்களை நான் புரிந்துகொண்டேன். என்னைச் சரியாகக்கொண்டு போய்விடமாட்டீர்கள் என்பது முற்றும் உண்மை.''

"புரிந்துகொண்டமைக்காக மகிழ்கின்றேன். நான் உன்னை ஏமாற்ற விரும்பவில்லை. திருமணம் செய்து கொள்ளவே ஆசைப்படுகிறேன்!''

"மிக்க மகிழ்ச்சி! நானும் திருமணம் செய்துகொள்ளுகின்றேன் என்று, சுலபமாகச் சொல்லிவிட முடியாத நிலையில் இருக்கிறேன். ஏற்கெனவே நான் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளாமல் இருந்திருந்தால், தங்களுக்கு மாலையிட எனக்கொன்றும் ஆட்சேபம் இல்லை. அவர் தந்த இன்பம் என் வயிற்றிலே வளர்கிறது, அந்த உயிரைக் கொல்லத்தான் வீட்டிலே ஆலோசனை பல வழங்கியும், நான் மறுத்துவிட்டகாரணத்தால், அடித்தார்கள்; உதைத்தார்கள். எப்படியும் அவரையே கல்யாணம்செய்து கொள்ளவேண்டும் என்றுதான், இப்படியெல்லாம் அலைகின்றேன்; இன்னலடைகின்றேன். அவரை--அத்தானைக் காணவில்லை. எப்படி நான் அவருக்குத் துரோகம் செய்வது? நிச்சயமாக முடியாது. ஒருத்திக்கு ஒருவன்தான்!''

மூச்சு விடாமல் பேசி முடித்த அவள் சோகமாக நின்ருள். சோர்ந்த உள்ளத்தோடு நடந்தாள். அழகைத் தனக்கு அடிமையாக்கிக் கொண்ட ஒரு ஆணழகன் வேகமாக எதிரே வந்துகொண்டிருப்பதைக் கண்டாள். பாவை அவளின் பாதங்கள், தரையிலே படியாமல் தாளம் போட்டன. நிற்க முடியாமல் ஓடினுள்; இன்பத்தால் துள்ளித் துள்ளிக் குதித்தாள். 'அத்தான்' என்றழைத்து அவனை ஓடிப்போய் அணைத்துக் கொண்டாள்.

யார் அவன்? ஆம்; மணி வயிற்றிலே அவள் வளர்க்கும், வளர்பிறையின் தந்தை! எதற்கும் இனி அவள் வருந்த வேண்டியதில்லை. வழி பிறந்துவிட்டது! மகிழ்ச்சியால் இரண்டுள்ளங்களும் மலர்ந்தன.

அதிர்ச்சி அடைந்த அவன் மண்டை, பாழடைந்த குட்டையாகியது. கையைப் பல்சக்கரத்தில் கொடுத்துவிட்டவனைப் போல, வேதனை அடைந்தான். அங்கிருந்து மெதுவாக நழுவி நடந்தான். வனிதைக்கு வருத்தமாகவும் இருந்தது; சுறுசுறுப்பான இன்பசாகரனின் நடையைப் பார்க்கும்போது, சிரிப்பும் வந்தது.

வேண்டுமென்றே அந்த வேங்கையை மல்லிகா அழைத்தாள். எதற்காக இருக்கும் என்று ஆசையாக அவன் திரும்பிப் பார்த்தான். கெட்டியாகக் கண்களை மூடிக்கொண்டான். இன்னும் அந்த இன்பசாகரனின் நடையிலே, வேகம் அதிகமாகியது. துன்ப சாகரத்தில் மூழ்கிவிட்ட அவன், விடுதி நோக்கி ஓட்டமும் நடையுமாகப் போய்க்கொண்டிருந்தான். அவன் கையிலிருந்த ஒருஜதை செருப்பைக்கூட இப்பொழுது காணவில்லை! ★

நன்றி

கோனர் தமிழ் உரை நூல்

(S. S. L. C. 1960)

பதிப்பித்த பிரதிகள் அனைத்தும் பத்தே நாட்களில் விற்பனையாகக் காரணமாயிருந்து ஆதரவளித்த மாணவர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் எங்கள் மனமுவந்த நன்றி.

இதுவரை உரைநூல் கிடைக்கப்பெருத மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி மறுபதிப்பு மீண்டும் அச்சாகிறது. ஒரு வாரத்தில் மீண்டும் பிரதிகள் கிடைக்கும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பழனியப்பா பிரதர்ஸ்,

பூரண விற்பனை உரிமையாளர்கள்:

கார்த்திகேயன் & கம்பெனி,

சென்னை-5.

முடிவு

சிறை வைங்கப்பட்ட பறவை போல் அடைபட்டுக் கிடந்த பூங்கோதை மரணத்தின் ஓரத்தே நிற்பது போன்ற பயங்கர உருவம் கொண்டாள் என்றாலும், இழுத்துச் செல்லப்பட்டாள் வரகூர் வரனுக்கு வாழ்க்கைப்பட! பெற்றெடுத்த பொற்கொடி வடித்திடும் கண்ணீர் பெற்றோர் மனதை இளகச் செய்யவில்லை. 'குலம்' அவர்கள் கண்களுக்குத் தெரிந்ததேயொழிய, மகள் கண்கள் குளமாகி இருப்பது தெரியவில்லை. வரகூர் வாரிசுக்குத் திருமணம் தடபுடலாகத் துவங்கியது.

பைத்தியத்திற்கும் பதுமைக்கும் நடைபெறும் திருமணங்கண்டு விருந்தினரெல்லாம் வியந்தனர். பெண்ணின் கழுத்தில் கட்டவேண்டிய தாலியைத் தன்கழுத்தில் கட்டிக்கொண்டு அவிழ்க்க மறுத்துச் சண்டித்தனம்செய்தான் திருஞான சம்பந்தன். இதைக் கண்டோர் கைகொட்டிச் சிரித்தனர். பூங்கோதை நெருப்பில் புழுவானாள். பிறகு அவன் தகப்பனாரின் பெரு முயற்சியால் தாலி பூங்கோதையின் கழுத்துக்கு ஏறிற்று. மணவிழா ஒருவழியாய் முடிந்தது. விருந்து வைபவங்களெல்லாம் விமரிசையாய் நடந்தது. உறவினர் விருந்துண்டு ஊருக்குப் புறப்பட்டனர் பூங்கோதையின் பெற்றோர் மகளை அழைத்து ஆறுதல் கூறினர். தங்கள் வாதங்களுக்கு ஆதாரமாக நளாயினியைக் காட்டினர். சினிமாக் கதைகளைச் சொல்லினர். தேள் கொட்டினால் உண்டாகும் வலி, மந்திரம் போடுபவனுக்கு எப்படித் தெரியும்? பெற்ற கடமையை முடித்துவிட்டதாக விடு திரும்பினர்.

மருத்துவ மனையில், ஒரு கண்ணும் ஒரு காலும் இழந்து, தன்னை யார் என்று பிறர் அடையாளம் கண்டுகொள்ள முடியாதவாறு முகமெல்லாம் விகாரப்பட்டு விசாரத்தின் உருவமாய், கவலையின் இருப்பிடமாய்க் கிடந்தான் கண்ணன், தன்னை யாரென்றும், தனக்கு இந்த விபத்து எப்படி ஏற்பட்டதென்றும் எவரிடமும் கூறமறுத்து விட்டான். கேட்டவர்களிடமெல்லாம் கதறி அழுதானேயொழிய, வாய்திறந்து எதையும் சொல்லவில்லை. இவன் உடல்நிலை தேற மாதங்கள் ஆறு ஆயிற்று. வெளிவந்தான் மருத்துவ மனையைவிட்டு. காலிழந்து கை இடுக்குகளில் கட்டைகொடுத்து அவைகள் உதவியால் நடந்து வந்தான். 'தாய் என்ன ஆனாளோ? தங்கை என்ன ஆனாளோ? பூங்கோதை கதி என்ன ஆயிற்றோ?' என்ற கவலை அவனை உலுக்கியது. சென்னை செல்லவேண்டுமே! என்ன செய்வான்? யாரிடமும்போய் உதவி கேட்டுப் பழக்கமில்லை. திகைத்தான்...திரிந்தான். மாநிலத்தில எந்த உயிரையும் விட்டு அகலாத பசி அவனை வாட்டியது. வேறு வழியின்றி வீடுதோறும் படையெடுத்தான். 'விருந்தோம்பல்' தமிழநாட்டை விட்டுச் சென்று நெடுநாள் ஆகிவிட்டதை அவன் அறியமாட்டான். பசியைப் போக்க முடியவில்லையென்றாலும், அதன் எரிச்சலைக் கொஞ்சம் குறைக்க உதவினர் சிலர்.

பெற்ற தாயைக் காணவேண்டுமென்ற ஆவல் அதிகரித்தது. மீண்டும் கடைவீதிகளில் பிச்சை எடுத்தான். ஒருவாரம் தொடர்ந்து இந்த அருந் திருப்பணியில் ஈடுபட்டதன் பயனாக இரண்டு ரூபாய் சேர்ந்தது. அதைஎடுத்துக்கொண்டு சென்னை புறப்பட்டான். சேர்ந்தான். தன் தங்கையைத் தேடிப்புறப்பட்டான். காணப்படவில்லை. விசாரித்தான் ......கண்ணம்மா மதுரை சர்க்கார் மருத்துவ மனையில் பணியாற்றுவதாய்க் கேள்விப்பட்டான். மகிழ்ந்தான். அவள் தாய் இறந்துவிட்டாள் என்றதும் 'அம்மா...அம்மா' என்று அலறித் துடித்தான். வேதனை அவனை வெறியனாக்கியது. அவன் போட்ட கூச்சல் கேட்டு அதிகாரிகள் அவனை வெளியில் கொண்டுவந்து விட்டனர். சிறு குழந்தைபோல் நடைபாதையில் படுத்துப் புரண்டான். கண்ணீரால் அந்தப் பாதையைக் கழுவினான். கதறி அழுபவனைப் பார்த்துப் பரிதாபப்பட்டவர்கள் உண்டு. ஆனால் ஆறுதல் கூறினவர்கள் இல்லை. எப்படியாவது தன் தங்கையைக் காணவேண்டுமென்று ஆவலுற்றான். வழிச் செலவிற்கு வழக்கமான வேலையைத் துவக்கினான்.

*

பைத்தியத்திற்கு வாழ்க்கைப்பட்ட பூங்கோதையின் கண்கள் வற்றாத நீர் ஊற்றுகளாயின. சித்திரப் பதுமை போலிருந்த அந்தப் பத்தரைமாத்துத் தங்கம் சித்திரவதைக்கு ஆளாகிவிட்டது. அறுசுவை உணவு... ஆள அரண்மனை போன்ற வீடு... எதையும் செய்யக் காத்து நிற்கும் பணியாட்கள்... அழகிற்கு அழகு செய்யும் ஆபரணங்கள்... எண்ணாது குவிந்துள்ள பணம் நிறை இரும்புப் பெட்டிச் சாவி... இவ்வளவும் பூங்கோதைக்கு உண்டு! ஆயினும் அவள் நிம்மதியிழந்து, எப்போதும்

ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிக் கிடந்தாள். எப்போதாவது அவள் இருக்கும் இடத்தில் இருந்து சத்தம் கேட்டால் அது அவள் குரலாக இருக்காது. குமுறும் உள்ளத்தினின்றும் எழும் பெருமூச்சாகத்தான் இருக்கும்.

பிள்ளைக்குத் திருமணம் புரிந்தும் பைத்தியம் தெளியாதது கண்டு மிராசுதார் பெருந்துயருற்றார். அவரின் கடைசி முயற்சியும் தோல்வியுற்றது! பித்துப்பிடித்த பிள்ளையையும் காலத்தால் கரைந்து வரும் மருமகளையும் பார்த்துப் பார்த்து ஏங்கினர். அவரும் மன அமைதியின்றி வாடித் தவித்தார். அமைதி வேண்டி யாத்திரைப்போக விரும்பினர். மகனையும் மருமகளையும் அழைத்துக்கொண்டு சித்ரா பௌர்ணமிக்காக மதுரை புறப்பட்டார்.

மதுரை மருத்துவ மனையில் பணியாற்றி வந்த டாக்டர் மாற்றப்பட்டு புதிய டாக்டர் வருகிறார் என்று மருத்துவமனை பணியாளர்கள் அனைவரும் காத்திருந்தனர். அந்தக் கூட்டத்தில் கண்ணம்மாவும் ஒருத்தி. புதிய டாக்டரும் வந்தார். அவரைப் பார்த்ததும் கண்ணம்மாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. வந்தது டாக்டர் முத்து! முத்து முதலில் கண்ணம்மாவைக் கவனிக்கவில்லை. பிறகு அடையாளம் தெரிந்துகொண்டு அவளின் சோக வரலாறு கேட்டு வருந்தினன். கண்ணனைப்பற்றிக் கேட்டுக் கலங்கினன். நெடுநேரத்திற்குப் பிறகு கண்ணம்மாவுக்கு ஆறுதல் கூறிவிட்டு தன் பணியில் ஈடுபட்டான்.

வண்ணக்கிளியாக வளர்ந்துள்ள கண்ணம்மாவின் தோற்றம் கண்டு முத்துவின் பழைய எண்ணங்கள் உயிர் பெற்று எழுந்தன. அவனுடைய கடைக்கண்பார்வை எப்போதும்அவள்பக்கம் இருந்தது. கண்ணம்மா நெஞ்சிலும் பழைய நிழல் உருவெடுத்தது. இருவர் உள்ளங்களிலும் ஆசை அலைமோதுவதை இருவருமே அறிவர். ஆயினும் இருவரும் மௌனமாய் இருந்தனர்.

மதுரையில் தனி மாடிவீடு வாடகைக்கு எடுத்திருந்தார் மிராசுதார் பட்டுலிங்கம்பிள்ளை. ஒரு நாள் மாலை 7-மணியிருக்கும்; மிராசுதார் வீட்டில் இல்லாதநேரம். பூங்கோதை வீட்டு வாசற்படியில் நின்றுகொண்டு தெருவில் போகும் கூட்டத்தைப் பார்த்திருந்தாள். "நீயா?...பூங்கோதை" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத்திரும்பினாள். எதிரில் விகாரமான தோற்றத்தோடு ஒரு நொண்டி நிற்கக் கண்டாள். அப்படி ஒரு உருவத்தை அவள் அதற்கு முன் பார்த்ததில்லை. அவள் பார்வை "யார் நீ" என்ற கேள்விக் குறியை அனுப்பியது.

"என்னை அடையாளம் தெரியவில்லையா?......தெரியாது!......எப்படித் தெரியும்? இந்தக் கோலத்தோடு என்னைச்சந்திப்பாய் என்று கனவுகூடக் கண்டிருக்க மாட்டாய், கண்ணிழந்து காலிழந்து, முகமெல்லாம் விகாரப்பட்டு அருவருக்கும் வடிவமாக, உன் எதிரே நிற்கும் என்னை அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் உன்னை நான் அடையாளம் கண்டுபிடித்துவிட்டேன். உன்னை மீண்டும் காண வேண்டும் என்பதற்காகத்தானே என்னவோ கொடுமைக்காரர்கள் ஒரு கண்ணை பழுதாக்காது விட்டு விட்டனர்? சித்திரபாவையே! என் நித்திரையில் நிதம்வந்து சதிராடும் பத்தரைமாத்துத் தங்கமே! பார்... பார் என்னை! விகாரபட்டிருக்கும் என் முகம்! குருடாகியிருக்கும் என் கண்! முடமாகியிருக்கும் இந்தக் கால்! இவையெல்லாம் பிறப்பிலேயே பழுதுபட்டவைகள் அல்ல! காதல் தந்த பரிசு!...பூங்கோதை!......உன்னைக் காதலித்ததின் விளைவு!" என்று கூவினன் அந்த நொண்டி!

"ஐயோ! நீ யார்......" என்று அழுதவாறே கேட்டாள் அம்மடந்தை.

"நானா?...காதல், காதல் என்று கற்பனையில் ஆசைக் கோட்டைகள் கட்டிக் கருத்திழந்து நிற்கும் இந்த ஏழை நொண்டியின் பெயர் கண்ணன்!"

"ஐயோ...நீங்களா" என்று கதறிய வாறே தாவினாள் அவன்மீது. அடுத்த விநாடி அவன் மார்பைக் கண்ணீரால் நனைத்தாள். தெருவிலேயே நடக்கும் இந்தக் காட்சியை மக்கள் நின்று வேடிக்கை பார்த்தனர். சிறிது நேரத்துக்கெல்லாம் மிராசுதாரரின் கார்வந்து நின்றது. பார்த்தார் இந்தக்காட்சியை! வேகமாக இறங்கி மருமகளை இழுத்து வீட்டினுள் தள்ளினர். கதவைச் சாத்தினர்.

கண்ணன் தெருவில் நின்றபடியே "பூங்கோதை... பூங்கோதை" என்று கதறினன். பூங்கோதை மாடிப்பக்கம் வந்து "கண்ணா! கண்ணா!" என்று கதறினாள். இதைப் பார்த்த மிராசுதார் அவமானமும் ஆத்திரமும் கொண்டதால் வெளியில் வந்து தன்கைத் தடியால் கண்ணனை அடித்து தள்ளினர். நொண்டி அவன் சுருண்டு கீழே வீழ்ந்தான். அவன் விழுந்த வேளையும் வேகமாக வந்த வேறொரு காரின் வருகையும் சேர்ந்தது. கண்ணன்மீது கார் ஏறி நின்றது! இதைப் பார்த்து மாடியில் நின்றிருந்த பூங்கோதை அங்கிருந்து அலறியபடி தெருப் பக்கமாகச்சாய்ந்து மாடியினின்றும் கீழே வீழ்ந்தாள்.

காரை ஓட்டிவந்தவர் கீழே இறங்கி அடிபட்டவனைத் தூக்கிக் காரில் போட்டுக்கொண்டு வேகமாக மருத்துவமனைநோக்கிக் கிளம்பினர். கார் ஓட்டியது வேறு யாரும் அல்ல. அது டாக்டர் முத்துவேதான்!

மருத்துவமனை சென்றதும் போலீசுக்குப் போன் செய்து மரண வாக்குமூலம் வாங்க உடனே வரும்படி சொல்லிவிட்டு, அடிபட்டவன் உடலில் வழியும் இரத்தத்தை நிறுத்த முயற்சித்துக்கொண்டிருந்தார். வழக்கம்போல் டாக்டர் முத்துவிற்குத் துணை புரிந்தாள் கண்ணம்மா. சிறிது நேரத்துக்கெல்லாம் பூங்கோதையும் தூக்கி வரப்பட்டாள். பிணமாகக் கிடக்கும் பூங்கோதையை அடையாளம் கண்டு கொண்ட கண்ணம்மா துடிதுடித்தாள். முத்து பார்த்து வேதனை கலந்த வியப்படைந்தான். இதற்குள்ளாகப் போலிசார் வந்து சேர்ந்தனர்.

மெள்ளச் சுயநினைவு பெற்ற கண்ணனிடம் மரணவாக்கு மூலம் வாங்கப் போலீசார் முயன்றனர். கண்ணன் கண் திறந்து சுற்றிப் பார்த்தான். சிறிது நேரத்தில் 'கண்ணம்மாவை' அடையாளம் கண்டுபிடித்தான். "கண்ணம்மா என்னைத் தெரியவில்லையா? நான் தான் உன் அண்ணன் கண்ணன்" என்று கூவினன். கண்ணம்மாவால் நம்ப முடியவில்லை. முத்துவைப் பார்த்தாள்.

"கண்ணனா?" என்று முத்து கேட்க 'முத்து...முத்து...நீயா" என்று அலறினன்.

"அண்ணா!" என்று அலறியவாறே கண்ணன் கரம் பிடித்துக் கதறினாள் கண்ணம்மா!

"கண்ணா! இதென்ன கோலம்! எப்படி உனக்கு இந்தகதி வந்தது" என்றான்—முத்து!

"முத்து...இது காதல்பரிசு" என்றான் செத்துக்கொண்டிருப்போன்.

"ஐயோ......உன்னை நானே கொன்றுவிட்டேனே! காரை உன் மீது மோதிய பாவியே நான்தான் கண்ணா...கண்ணா என்னைமன்னித்து விடு" என்று முத்து அழுதான்.

"அழாதே....முத்து.....அழாதே ......இனி இந்த உலகில் நான் வாழ்ந்து ஒருபயனுமில்லை. உலகை விட்டுப் போகும் கடைசி நேரத்தில் உன்னை வேண்டுகிறேன். கடைசி உதவி செய்வாயா?"

"கண்ணா! எது வேண்டும் என்றாலும் சொல் செய்கிறேன்"

"என் தங்கை......கண்ணம்மா அநாதை...அவளைக் காப்பாற்று" என்று இரண்டுபேர் கரங்களையும் இணைத்தான். மருத்துவமனையிலிருந்து, கொண்டுசெல்லப்பட்ட இரண்டு பிணங்கள், அன்று சுடு காட்டில் எரிந்தன! நீருகிப்போய் மேலே கிளம்பிக்கொண்டிருந்த அந்த இரண்டு பிணங்களின் புகையும் ஒன்றாகிக் காற்றோடு கலந்து கொண்டிருந்தன! காற்றிற்கேது ஏழை பணக்காரன் என்ற வேறுபாடு!!

4-ம் பக்கத் தொடர்ச்சி

எப்படி, புகைபிடிப்பதும், போலோ காலர் சட்டை போட்டுக்கொள்வதும் ஒரு 'பாஷன்'ஆகிவிட்டதோ; அதுபோல, இப்படிப்பட்ட பெரியவர்களை வைத்து வேடிக்கை செய்வதும்; அந்த வேடிக்கைகளுக்கு ஆச்சாரியார் போன்றோர் ஈடுகொடுப்பதும் ஒரு 'பாஷனாகி' வருகிறது.

* * *

உத்தமர் காந்தியடிகளைப்பற்றி உலகம் அறியும்! அவர் ஒரு நாத்திகரல்ல!! ஆயினும் அவர் வாழ்நாட்களில், பல அறச் செயல்களை என்றும் நிற்கும் வகையில் செய்துபோயிருக்கிறார். அவைகளிலே ஒன்று ஆலையூராம் அகமதாபாத்துக்கு அருகில் சபர்மதி ஆற்றங்கரையில் ஆசிரமம் ஒன்றமைத்து, ஏழைக் குழந்தைகளுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சிறார்களுக்கும் தொழிலும் கல்வியும் என்றும் கிடைக்கும்படி செய்திருக்கும் ஒரு அறநிலையம். அப்படிப்பட்ட அறநிலையத்துக்கு, ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் கிடைத்திடின் அது எவ்வளவோ பேருக்குப் பயன்படும்! ஆனால் அகமதாபாத்திலேயுள்ள பக்தர்கள் விடுவார்களா? அவர்களுக்கு இதெல்லாமா, அறச்செயலாகப்படும்? அதனால், சென்ற சில தினங்களுக்குமுன் முடிவெடுத்திருக்கிறார்கள். வியக்கத்தக்க முடிவு. இதோ, அந்த முடிவு.

அகமதாபாத், ஜூலை 15.

அகமதாபாத் கோவிலில், ஆண்டவனின் அறையில், போதுமான காற்று வசதியில்லாததையும்; அதோடு அதிக வெப்பமாயிருப்பதையும், அந்தக் கோவிலின் தர்மகர்த்தாக்கள் கூடியமர்ந்து ஆலோசித்து, முடிவில், மூலஸ்தானம் முழுமையும் 'ஏர் கண்டிஷன்' செய்வதென்று தீர்மானம் செய்திருக்கின்றனர்.

இது செய்தி! உலகத்தையே காப்பதாகக் கூறப்படும் பகவானுக்கு 'குளு, குளு' அறை கட்டிக் கொடுக்கப்போகிறார்கள், அகமதாபாத் நகரில்!! 'அவர்' இருக்கும் மூலத்தானத்தில் காற்றில்லையாம் —சூடு அதிகமாம்— அதற்கு இந்த வசதிசெய்து தரப்போகிறார்கள் பக்தர்கள்.

கேட்கும்போதே, சிரிப்பு வருகிறது, நமக்கு! குளுகுளு வாசம், குவலயத்தையெல்லாம் உண்டாக்கியதாகச் சொல்லும் ஆதிமுதல்வனுக்கு!! "அர்ச்சுனா! நானாகவும், நீயாகவும், நீயிருக்கும் தேராகவும், தேரில் பூட்டப்பட்ட குதிரையாகவும், அந்தக் குதிரை விடும் மூச்சாகவும், அகண்ட வியாபியாகயிருப்பவன் நான்" என்கிறார் பகவான் கீதையில், என்று பரவசத்தோடு சொல்லுவார்கள் பக்தர்கள். மண்ணாகவும், விண்ணாகவும், பொன்னாகவும், பொருளாகவும், அருளாகவும், அன்பாகவும், விளங்குபவர் ஆண்டவன் என்கிறார்கள்! சூரியனும் அவர்தான், நிலவும் அவர்தான், நெல்லும் அவர்தான், புல்லும் அவர்தான், 'கல்லினுள் தேரைக்கும், கருப்பை உயிர்க்கும் உணவளிக்கும் தயாபன்' அவர்தான் என்கிறார்கள்! அப்படிப்பட்ட எல்லாம் வல்லவனுக்கு, ஈர் ஐம்பதுவயது கூட உலகில் வாழமுடியாத இந்த மானிடப் பிண்டங்கள், குளிர்ப்பெட்டிச் சாதனம் செய்து குளிரவைக்கப் போகிறதுகளாம்!!

அகமதாபாத் கோயில் தர்மகர்த்தாக்களுக்கு, இதுதான் ஆண்டவனுக்குச் செய்யும் மிகப் பெரிய காணிக்கையாகப்படுகிறது. அருகேசபர்மதியிருந்தும்கூட, அறிவொளி ஏற்படவில்லை.

இதேபோல், ஒவ்வொரு கோயிலிலுமுள்ள தர்மகர்த்தாக்கள் விருப்பப்படியே அங்கே கிடைக்கும் வருமானம் செலவிடப்படவேண்டும் என்கிறார் பதஞ்சலியார்.

பகவான் திருநாமம் சொல்லி வரும் பணத்தை வீண் வழிகளில், சர்க்கார் செலவழிக்க எண்ணுகிறதாம்! அது தவறும்!!

"கோயிலில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு, பள்ளிக்கூடங்கள், படிப்பகம் போன்றவைகள் வைத்துப் பயன்படுத்த வேண்டும்"

என்றொரு குரல், எல்லா இடங்களிலும் கிளம்பி வருகிறது. இதற்கு, நல்லவர் பலரும் ஆதரவு தெரிவித்து வருகிறார்கள்.

இப்படிப்பட்ட காரியங்களுக்குக் கோயில் வருமானம் செலவழியக் கூடாது, அது சட்டப்படியும் சம்பிரதாயப்படியும் விரோதம், என்று சர்ச்சை செய்கிறார், இந்த முன்னாள் நீதிதேவர்.

'குளுகுளு' வாசத்துக்கும், அர்ச்சகர் வீட்டுக்கும், வாணவேடிக்கைக்கும், திருவமுது சாத்துப்படிக்கும் செலவழிந்தாலும் செலவழியலாம்— தீனர்களின் துயர் துடைக்கவோ, ஏழைகளின் மனதில் கல்வியறிவு புகவோ, இப்பணம் எடுத்துக் செலவிடப்படக் கூடாது— அப்படிச் செய்யும் துணிவு அரசாங்கத்துக்கும் ஏற்படலாகாது— இப்படிப்பட்ட சட்டங்களைச் சர்க்காரே பிறப்பிப்பதும், ஆகாது என்று, அங்கலாய்த்திருக்கிறார் அங்கே.

சென்னை மாநில அறநிலைய அமைச்சராக இருக்கும் பக்தவத்சலம், நாத்திகரல்ல! என்றாலும், அவரது இலாகாமீதும், அந்த இலாகா கொண்டுவரவிருக்கும் சில யோசனைகள்மீதும் கண்டனங்கள் கிளப்பப்படுகிறது!!

சிவ வாக்கியர் குறிப்பிட்ட சட்டநாதப்பட்டராகயிருந்தால், நாம் ஆச்சரியப்படவோ, திகைக்கவோ ஏதுவில்லை; கோயில் வருமானத்தையே தொழிலாகக் கொண்டுவிட்ட அவர்களைக் கோபிப்பதிலும் பொருளில்லை. ஆனால், குந்தப்போவது காஸ்மா பாலிடன் கிளப்! பேட்டி கொடுப்பது வெள்ளைத்துரைமார்களுடன்! விவேகம் பற்றி உலகுக்கே அறிவுரைகள் சொல்வது! அதே சமயம், இப்படியும் கலந்துகொண்டு, வீரமுழக்கம் செய்வது!! இவர்களைப்பற்றி என்ன எண்ணுகிறீர்கள்!!

கிளியின் கதை!

[மாஸ்மகிழன்]

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு...

கிளி பிறந்தாள். அழகைக் கற்பனை செய்தவர்களுடைய கண்களெல்லாம் குளிர்ந்தன! ஆமாம்! அழகு இந்த உலகத்திலே பிறந்துவிட்டது.

குறுகுறு நடந்தாகிவிட்டது. கானகத்து மானின் துள்ளல் கண்டாகிவிட்டது. மழலைச் சங்கிதமும் முடிவடைந்துவிட்டது. கிளி மொட்டாகி மலர்ந்து, எழில் மணம் பரப்பினாள். அழகுக்கு அலங்காரம் வந்துவிட்டது. இப்படியொரு வண்ணக்கோலத்தை நம் வாலிப காலத்தில் காணவில்லையே எனப் படுகிழங்களும் ஆயாசப்பட்டன. வாலிபர்களோ அழகு இலாகிரியில் தோய்ந்து கருகினார்கள். நாம் கொடுத்துவைக்காதவர்கள்! இன்னொரு முறையேனும் அரசகுடியில் பிறக்கவேண்டும். கிளியின் தோள் தொட்டு, கதுப்புக் கன்னங் கிள்ளி விளையாடவேண்டும் என்று இன்ப தேவனைப் பிரார்த்தனை செய்துகொண்டார்கள்! என்ன செய்வது, எப்படியாவது அலைபாயும் உள்ளத்திற்குச் சமாதானம் சொல்லிக்கொண்டுதானே ஆகவேண்டும்! அவ்வென்ன சாமான்யமானவளா! எகிப்து நாட்டு இளவரசியல்லவா!

அவளை மணக்கப்போகும் மகராசனைக் காணுவதற்குள் அவளுடைய நாடு பறிபோனது. பகைவர்கள் வென்றுவிட்டார்கள்! அவளுடைய கூந்தல் அணியில் ஒளி பொழிந்துகொண்டிருந்த மணிமுடி சாய்ந்துவிட்டது. அவள் பராரியானாள். கையிலே காசில்லை, நெஞ்சிலே அமைதி இல்லை. சந்திர பிம்பத்திலே இயல்பு இல்லை. அவளுடைய மயில் கழுத்திற்கே பகைவர்களுடைய கட்டாரி காத்துக் கிடந்தது.

பயந்துவிட்ட கிளி மணந்துகொள்ள விரும்பினாள். அவளுடைய அரச சம்பிரதாய முறையில் சகோதரனைக் கலியாணம் செய்துகொண்டாள்.

எதற்கு இத்தனை வியப்பு? அவளுடைய வமிசத்தில் சித்தப்பாவைக் குலவிய குமரிப்பெண்களும் உண்டு! நமக்கு இது எப்படித் தோன்றினாலும், அவர்களுடைய வியாக்கியானப்படி, அரச சுத்தியைக் காப்பதற்குத்தான் ஒரு தாயின் குழந்தைகளே ஒருவரை ஒருவர் மணக்கலாம் என்கிறமுறை உண்டாயிற்றாம்!

புதுமணத் திளைப்பில் கிளி சில காலம் இன்புற்றுத்தான் இருந்தாள். திடீரென்று அரும்பெடுத்துவிட்ட குடும்பத் தகராறுதான் அவர்களுடைய அன்பு வாழ்க்கைக்கு உலைவைத்துவிட்டது.

மீண்டும் போராட்டம்! மறுபடியும் கண்ணீர்!

கிளி நைந்துருகினாள். அவளுடைய கணவனே அவளைக் கொத்திக் கூறுபோட்டுவிட வாளெடுத்துப் போர் முழக்கிக் கிளம்பிவிட்டான்.

உயிரின் ஆசை அவளை எகிப்திலின்று துரத்தியது! மூச்சு விம்ம ஓடினாள்...

*

பொற்கிண்ணத்திலே திராட்சை ரசம் தளதளத்துக்கொண்டிருந்தது. சாற்றில் மூழ்கி இருந்த தமிழகத்து முத்துக்கள் மாவீரன் ஜூலியஸ் சீசரிடம் தாயகத்தின் சிறப்பை ஓதிக்கொண்டிருந்தன. சீசர் பொற்கிண்ணத்தைக் கரத்தில் பிடித்தான். ஆரணங்கு அவனுக்கு முன்னே ஆடிக்கொண்டுதான் இருந்தாள். அவனுடைய எண்ணம் தூங்கியது. அங்கே இன்பக்கனவு... கிளி மெல்ல வந்தாள்...புன்சிரிப்பைக் குழைத்துக்கொண்டே அவனிடம் பழரசக் கோப்பையைத் தந்தாள்... அவளுடைய மனதிலே கொப்பளித்துக்கொண்டிருந்த வெறிக்குத் தாளம் போட்டது. அவன் எட்டி அவள் மென்கரத்தைப் பற்றினான்... இன்பமும் சாந்தியும் அவனைப் பொன்னூசல் ஆடச்செய்தன...

அப்போது யாரோ வந்து அவனுடைய களிப்பைக் கலைக்கிறார்கள். ஆத்திரத்தோடு வந்தவனைப் பார்க்கிறான். அவன் அஞ்சியும் அஞ்சாமலும் மெல்ல வருகிறான். ஏதோ காதுகளிலே மொழிகிறான். உடனே அவன் வதனத்திலே மறுமலர்ச்சி! இதயத்திலே கிளுகிளுப்பு!

கலகலவென்று தன்பாட்டில் புன்னகை பூத்துக்கொண்டே "அடே...... உடனே போய்க் கிளியை அழைத்துவா... அவள் என்முன் தோன்றியாகவேண்டும்" என்று கட்டளை இட்டான். சேவகனோ சிட்டாகப் பறந்தான்.

சீசர் நிமிர்ந்து உட்கார்ந்தான். "கிளி...! உன்நிலை இப்படியா ஆகவேண்டும்? அல்லோல கதியில் நீயா? ஒரேஒரு வார்த்தை சொல்லி இருக்கக்கூடாதா? எப்படித்தான் நலிவுற்றிருக்கின்றாயோ...உனக்கா இப்படியொரு காலம் வரவேண்டும்?"

சீசர் தன்பாட்டில் உளறிக் கொட்டிக் கொண்டிருந்தான்.

அனுப்பப்பட்ட சேவகனின் வருகையிலே அவன் மனது அலைந்துகொண்டிருந்தது!

*

கடுங்குளிரால் நடுங்கி முடங்கிக் கிடக்கும் குருவியைப்போல் அந்த வீட்டில் கிளி அடைந்துகிடந்தாள். அவளுடைய இதயத்தின் பீதியைக் கண்கள் காட்டி நின்றன. வீட்டுக்கு வெளியே யாரோ கதவை இடித்துக்கொண்டிருந்தார்கள். அவள் நிலைகுலைந்தாள். மறைந்திருக்கும் இந்த இடமும் பகைவர்க்கு எட்டிவிட்டதா என ஏங்கினாள். மனதை உறுதிபடுத்திக்கொண்டு கண்ணீரும் கம்பலையுமாய்ச்சென்று கதவைத்திறந்தாள்.

ரோமானிவீரர்கள் முடுக்கோடு தோற்றமளித்தார்கள்.

அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"நீங்கள்தானே கிளியோபாட்ரா..."

"ஆம்..."

"உங்களை மாவீரர் ஜூலியஸ் சீசர் அழைத்துவரும்படி ஆணையிட்டுள்ளார்"

"சீசரா..."

"ஆமாம்..."

"அலெக்சாண்டிரியாவில் நான் இருப்பதாக நினைத்துக்கொண்டு என் கணவனின் ஒற்றர்கள் கொடு

வாள் ஏந்தித் திரிகிறார்கள். நான் இப்பொழுது வருவதற்கில்லை...... இரவு வருகிறேன்...ஒரு சிறியபடகில் என்னை எதிர்பார்க்கலாம்...... நான் நிறைய 'அவரை'க் கேட்டதாகச் சொல்லுங்கள்...''

கிளி புன்னகை இழையப் பேசிய பாங்கு, ரோமானிய மறவர்களையே திணறச்செய்தது. அவளுடைய வார்த்தைக்குக் கட்டுபட்டு, முடுக்கையும், முறைப்பையும் அடக்கி வைத்துக்கொண்டு திரும்பினார்கள்.

அவளுக்குச் சொல்ல முடியாத குதூகலம்! சீசரின் கட்டளை அவளுக்கு மனோகரமாக இருந்தது.

இரவு வந்துவிட்டது. உலகை இருள் விழுங்கி இருந்தது. வேலைக்காரனை அவசர அவசரமாக அழைத்தாள். அவன் அடக்கமாக அவளுக்கு முன்னர் வந்து நின்றான்.

"இப்பொழுது நான் அலெக்சாண்டிரியாவுக்குப் புறப்படவேண்டும். படகைத் தயாராக வைத்துக்கொள். மெத்த இரகசியமான பிரயாணம்; தெரிகிறதா...?''

அவன் மௌனமாக இருந்தான்.

அவள் உள்ளே போனாள். ஒரு கம்பளத்தைக் கொண்டுவந்தாள். வேலைக்காரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"இதோ பார்......இதில் என்னை மறைத்து பொட்டலமாகக் கட்டி... படகில் கொண்டுபோக வேண்டும் ...திறமையாகப் படகைச்செலுத்த வேண்டும்...என்ன?''

"சரி அம்மா புறப்படுவோமா...''

அவள் கம்பளத்தில் படுத்தாள். அவன் சுருட்டிப் பொட்டலமாகக் கட்டினான். படகில் பக்குவமாக அந்தப் பொட்டலத்தைக் கிடத்தினான்.

படகு நீரைக் கிழித்தது! அலெக்சாண்டிரியாவை அந்தக் காரிருளில் அது நெருங்கிக்கொண்டிருந்தது.

படகை எதிர்பார்த்து நின்ற ரோமானிய மறவர்கள் புளகாங்கிதத்தில் மூழ்கினார்கள்.

படகு கரைக்குவந்து சேர்ந்தது. படகில் இருந்த பொட்டலத்தைக் கண்டு அவர்கள் திடுக்கிட்டார்கள். ஆத்திரத்தோடு கம்பளப் பொட்டலத்தைச் சீசருக்கு முன்னால் கிடத்திப் படகோட்டியை கனல்கக்கப் பார்த்தார்கள். படகோட்டி சிரித்தான்.

பொட்டலம் அவிழ்க்கப்பட்டது. அழகு லோக எழில் மங்கை மின்னலெனப் பளிச்சிட்டாள். சீசர் மது மயக்கத்திலிருந்தபடியே "என்ன என்ன என்று கண்கள் வியந்து நிற்க அந்த அழகியைச் சிரிப்போடு பார்த்தான் அவளுடைய முதல் தோற்றத்திலேயே இதயத்தைப் பறிகொடுத்தான். அவனுடைய ஐம்பத்து நான்காவது வயதின் வழுக்கலும், நரையும் சோம்பலைமறந்துவிட்டு, சுறுசுறுப்பைக் காட்டி, அந்த இருபத்தொரு வயதுக் காவியப் பாவையின் குளிர் நிழலில் உலகையே மறந்துவிட்டன. அவனுடைய மாவீரத்தனம் அவளிடம் மண்டியிட்டுவிட்டது.

அவளுடைய கணவன் இதைக் கேள்வியுற்றான். அவன் பதைபதைத்தான். அவனுடைய சடலத்தைத் தணல் கருகச்செய்து கொண்டிருந்தது. உறக்கத்திலும் அவன் கரத்தில் கொலைவாள் துடித்துக்கொண்டிருந்தது.

கிளி இதைத் தெரிந்துகொண்டாள். மறந்துவிட்ட பகை மூண்டுவிட்டது. தன் செம்பவள உதடுகளால், சீசரின் மதுவழியும் இதழ்களுக்கு ஆணையிட்டாள். அக்கணமே பட்டாளம் கிளம்பிவிட்டது.

நைல்நதிதீரத்தில் அவளுடைய கணவனும், உடன் பிறந்த சகோதரனுமாகிய பகைவன் மாண்டுபோனான்.

வெற்றிச் சிரிப்பு அவளை சிங்காரித்தது! எகிப்தின் இணையற்ற இராணியானாள். அவளுடைய சரிந்த சாம்ராஜ்யம் மீண்டும் எழிற்கோலம் பூண்டது.

எகிப்திய இராணி கிளி......ஆம் கிளியோபாட்ராதான் சீசரைக் கண்டு முறுவலித்தாள். சீசர் உச்சிகுளிர்ந்தான். அவளுடைய இன்ப அனுபவத்தின் முத்திரையும் தோன்றிவிட்டது. குழந்தைப் பேறு இல்லாமல் வெதும்பிக்கொண்டிருந்த சீசருக்கு அவள் ஒரு மகனைப் பெற்றுத் தந்தாள்.

காதல் உறுதியாகி விட்டது. சீசர் அவளை மணந்துகொள்ள விரும்பினான், அவன் நெஞ்சம் குழம்பியது. ஏற்கனவே அவன் மணமானவன். மீண்டும் ஒரு கலியாணம் என்றால், அவனுடைய 'பழைய இராணி' ஒப்புவாளா? அல்லது ரோமனிய பெருமக்கள் தான் அவனுடைய கோரிக்கையை ஏற்றுக் கொள்வார்களா? அவன் ஒரு முறை தேம்பினான். தன் மகனின் பிஞ்சு முகத்தைக் கண்டு அழுதான்.

ஆனால் கிளியோ துளியும் அதைக் குறித்துக் கவலைப்படவில்லை. அவள் எண்ணவளம் படைத்தவள். கற்பனைச் செழிப்பு நிரம்பியவள்.

மகனுக்குத் தந்தையில்லை என்ற குறையிருக்கக் கூடாது; அவனைச் சீசரின் மகனாக அங்கீகரிக்கவேண்டும் என்பது அவளுடைய ஆவல். இதை எப்படிச் சாதிப்பது என்று அவளுக்குப் புரியவில்லை. ஊர் வாயை மூடுவதற்கு வழிகாண அவளுக்கே சிரமமாக இருந்தது! எவ்வளவோ சிந்தனை செய்தாகிவிட்டது. ஒன்றுமே துலங்கவில்லை. வழி வகைகளில் ஆராய்வதில் இம்மியளவும் பயனில்லை என்பது அவளுக்குத் தெரிந்துவிட்டது.

பேசாமல் மத குருக்களை அழைத்தாள். தூபம் போட்டாள். "ஜூலியஸ் சீசர் மனிதரல்ல. ஆண்டவன் திரு அவதாரம். இந்த உலகத்தை இரட்சிப்பதற்கு ஆண்டவனே சீசர் உருவில் பிறந்திருக்கிறார். எல்லோருக்கும் வரப்பிரசாதம் நல்குவதுபோல் இராணிக்கு ஒரு குழந்தையை பேரருள் செய்துள்ளார்...'' என்று சொல்லும்படி அக்குருக்களுக்குக் கட்டளையிட்டாள். குருக்கள் அத்திருப்பணியை அபாரமாகச் செய்தார். ஊர் ஊமையாகிவிட்டது. அன்றைய எகிப்தியர்கள் நம்பிவிட்டார்கள். இளவரசன் பிறந்துவிட்டான் என்று மகிழ்ந்தார்கள்!

மனிதனை ஆண்டவனாகக்கூட மாற்ற என்னால் முடியும் என்று கூறுவதைப்போல் கிளி, சீசரைப் பார்த்து இதழ் மலர்ந்தாள். அவனோ அவளுடைய சக்தியின் அபார வித்தையைக் கண்டு அதிசயித்தான்.

●

ரோமானியத்தில் அதுவரை தோன்றாத பெரு மறவன் மார்க் அந்தோனி தோன்றிவிட்டான். அவனுடைய தோள் வலிமை பயங்கரப் பகைகளை எல்லாம் தவிடுபொடியாக்கிக் கொண்டிருந்தது. அவன் வெற்றியிலே புரண்டு கொண்டிருந்தான். வாகை அவனோடு இழைந்துவிட்டிருந்தது.

அந்த வீரன் தன் படையுடன் கிழக்கில் வெற்றிக்கொடி நாட்டக் கிளம்பினான். கிழக்கில் செழிப்பானதும், கும்பத்து நிறைந்ததும் எகிப்து என்பதை அவன் அறிந்தான். அவனுக்கு எகிப்தின்மேல் ஒருகண் விழுந்துவிட்டது. அவனுடைய மறவர்களில் சிலர் அலெக்சாண்டிரியாவைப் பற்றியும், இராணி கிளியோபாட்ராவைப்பற்றியும் ஜனல்களைப் பேசினார்கள். "கிளியோபாட்ராவைக் கொன்றுவிருந்து அருந்தவேண்டும்" என்று வீராவேசமாகப் பேசி வெறியூட்டினார்கள்.

அவனுக்குச் சினம் பெருகிவிட்டது. "கிளியோபாட்ராவா... யார் அவள்?" என்று சிறுத்தையைப் போல் சீறினான்.

✱

கிளி நடுங்கினாள். கிடுகிடுத்தாள். பாய்ந்துவரும் அப்புலியின் வாயினின்று தப்புவது எப்படி? அவளுடைய காதலன் சீசரும் இல்லை. அவனும் இறந்துவிட்டான். சிறகொடிந்து நின்றாள். ஆனால் தைரியத்தைத் தளரவிடவில்லை. மார்க் அந்தோனி தன் நாட்டில் கால் வைக்காமல் இருக்க வழி என்னவென்று ஆராய்ந்தாள். வாள் முனையிலா? அதுமுடியாதது! தந்திரத்தாலா? அது பிய்த்தெரியப்படும். பிறகு? விழி முனையிலா...? அதனால்தான் முடியும் என்றுகூட அவள் எண்ணவில்லை. ஏதோ பார்ப்போம் என்ற தோரணையில்தான் இருந்தாள்.

அலங்காரக் கப்பல் ஒன்றில் வீரன் மார்க் அந்தோனியைப் பார்க்கப் புறப்பட்டாள். வண்ணங்களும், வாசனைத் தைலங்களும், பீலி இறகுகளும் அந்தக் காலத்தில் பரிமளித்தன. இத்தனைக்கும் மேல் அழகிகளின் நாட்டியக் கச்சேரி முக்கியத்துவம் பெற்றிருந்தது. கப்பலில் இருந்து அவள் இறங்கினாள். பட்டு வேய்ந்த சிங்காரக் குதிரை வண்டியில் மார்க் அந்தோனியைப் பார்க்கச் சென்றுகொண்டிருந்தாள்.

அச் சுந்தர தேவதையை மார்க் பார்த்தான். மாவீரம் மடிந்துவிட்டது. அவனும் தாசனாகிவிட்டான். மார்க் அந்தோனி மிகவும் முரடன். திணவெடுத்த அவன் தோள்கள் எப்படியெல்லாமோ புரண்டன! அந்த ஆபத்தான ஆசாமியிடம் பழகி வெற்றியோடு இருக்க அவள் ஒரு தனி வழியை வகுத்துக்கொண்டாள்.

அவன் என்னென்ன விரும்பினானோ அதையெல்லாம் செய்தாள் அவனோடு மீன் பிடித்தாள்; வேட்டையாடினாள்; கவிதைகள் புனைந்தாள். பூமி இரவை அணைத்த நேரங்களிலெல்லாம் அவள் அவனை அணைத்தவாறு நடந்து, அவனுக்கு இன்பங் கூட்டினாள். அவனுக்குப் பிடித்த சுவையான பண்டங்களை எல்லாம் இரவுபகலென்று பாராமல் சமைத்துப் போட்டாள். அந்தோனி அவள் காட்டிய அன்பில் மதியை இழந்தான். மயங்கி நின்றான். அவளுக்கு பொனிஷியா கடற்கரை பூராவையும் அன்பளிப்பாகத் தந்தான். மேலும் ஜெரிகோ பிரதேசம், சைப்ரஸ், கிரீட் ஆகிய தீவுகளையும் பரிசளித்தான். முடிவில் ஆசியாவையே அவளுடைய பாதக் கமலங்களில் சமர்ப்பித்தான்.

இந்தச் சுவையான சேதி ரோமானியருக்குத் தெரிந்தது. அவர்களுடைய இரத்தம் கொதித்தது. "போர் முனைகளில் ரோமானிய வீரர்களின் இரத்தங் கொட்டியவையெல்லாம் ஒரு எகிப்துக்காரிக்குப் பரிசளிக்கவா?" என்கிற வினா ஆகாயத்தைத் தொட்டது. புரட்சிப் பயங்கரக் கரங்கள் ஆவேசத்தைக் கப்பி வந்தன!

கிளியோபாட்ராவின் காலம் மலையேறிவிட்டது. அழகு லாகிரியிலிருந்து உலகம் விழித்துக்கொண்டது. கிளியோபாட்ரா-அந்தோனி ஆகியவர்களுடைய கப்பல்கள் நொறுக்கப்பட்டன! படை குலைக்கப்பட்டது!

மார்க் அந்தோனி தலை கவிழ்ந்தான். நெருங்கிவரும் பகைவர்கள் தன்னைக் கைதுசெய்து கொள்வதற்கு முன்னால் தன்னைத்தானே காயப்படுத்திக்கொண்டு தற்கொலை செய்துகொண்டான்! கிளியோபாட்ராவின் மென்கரங்களிலேயே ஆவிவிட்டான்!

அப்பொழுதுதான் அவளும் உறுதி எடுத்துக்கொண்டாள். கரங்களில் விலங்கிடப்பட்டு ரோமாபுரிய வீதிகளில் ஊர்வலம் வருவதைவிட இறந்துவிடுவது என்பதுதான் அது. அதன்படி அவள் தற்கொலை செய்துகொண்டாள். அவள் எப்படித் தற்கொலைசெய்துகொண்டாள் என்பது யாருக்குமே புரியவில்லை. அவள் இறந்து, இருபது நிமிடங்கள் கழித்துப் பார்த்தவர்களால் கூட இதனை முடிவுகட்ட முடியவில்லை. சிலர் அவள் கடித்துக்கொண்டு, பிறகு அந்த இடத்தில் நச்சுப்பாம்பின் விஷத்தைத்தடவிக்கொண்டு இறந்திருக்கிறாள் என்றார்கள். சிலர் அல்ல அல்ல, ஏதோ ஒரு விஷப் பூச்சியை பூக்கூடை மூலமாக கடத்திவந்து; முடிவில் தன் மார்பகத்தில் அதைவிட்டுக் கடிக்கச் செய்து மாண்டிருக்கிறாள் என்றார்கள். ஆனாலும் இப்படித்தான் அவள் இறந்திருக்கிறாள் என்று கூறமுடியாமல் போயிற்று.

இன்றுகூட அவள் மார்க் அந்தோனிக்குப் பக்கத்தில் எகிப்தில் எங்கோ அமைதி உறக்கம் செய்கிறாள். ஆனால் எங்கு? எந்த இடத்தில்? என்பது இன்னும் தெரியவில்லை! இது ஒரு பரிதாபம்தான்,

அகில பிரசித்தி பெற விரும்பும் நண்பர்களே வாருங்கள், யாருக்கும் சொல்லிவிடாதீர்கள் உங்கள் புகழ் உலகமெல்லாம் அடிபடவேண்டும் என்கிறஎண்ணம்இருக்கிறதா? அப்படியானால் அலெக்சாண்டிரியாவுக்குச் செல்லுங்கள். கிளியோபாட்ராவின் கல்லறையைக் கண்டுபிடித்துச் சொல்லுங்கள்...பிறகு நீங்கள் உலகப் புகழ்பெற்றுவிடுவீர்கள்! புறப்படுகிறீர்களா?

கிளியோபாட்ரா இணையற்ற அழகி! இரண்டு உலகப் புகழ் பெற்றுவிட்ட மறவர்களை மயக்கிவிட்டவள்! இரண்டாயிரம் ஆண்டுகளாகிவிட்டன! இன்னும் அவள் பெயரை எவ்லோரும் அறிவார்கள், அப்படியென்ன அவள் சாதனை?

ஒன்றுமே இல்லை. அவள் ஒரு பேரழகி—அவ்வளவுதான்!

✱